بسم الله الرحمن الرحيم نحمده ونصلّی علیٰ رسوله الکریم وعلیٰ عبده المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 1

வாராந்திர பத்திரிகை

# பதர்

காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 17

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

24 ரமலான் 1437 ஹிஜ்ரி கமரி 30 இஹ்ஸான் 1395 ஹிஜ்ரி ஷம்ஸி 30 ஜூன் 2016


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**இஸ்திகாமத் (உறுதியாக நிலைத்திருத்தல்) என்பது உள்ளத்தில் வேரூன்றி விடுகின்ற அத்தகைய ஈமானாகும். அதாவது, எந்தவொரு சோதனையின் சமயத்திலும் தடுமாற்றம் அடைந்து விடக்கூடாது. மேலும், எந்த ரீதியில் எந்த வழிமுறைக்கேற்ப நற்செயல்கள் செய்யப்பட வேண்டும் என்றால் அவற்றில் இன்பம் உருவாக வேண்டும். கடினமும் கசப்பும் உணரப்படக் கூடாது. அவை இல்லாமல் உயிர் வாழ முடியாது (என்ற நிலைமை இருக்க வேண்டும்)**

# வாக்களிக்கப்பட்ட மஸீஹூம் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

இந்த வசனங்களில் மறைந்துள்ள இறை ஞானத்தின் கருத்து இதுவாகும். மேற்குறிப்பிட்ட வசனத்தில் இறைவன் இவ்வாறு கூறியுள்ளான்: الٓمّٓ ذٰلِكَ الْكِتٰبُ لَا رَيْبَ ۛ فِيْهِ ۛ هُدًى لِّلْمُتَّقِيْنَ அதாவது, இது இறைவனின் அறிவின் மூலமாக தோன்றிய அந்த வேதமாகும். அவனது அறிவு அறியாமையில் இருந்தும் மறதியிலிருந்தும் தூயதாக இருப்பதால் இந்த வேதம் ஒவ்வொரு சந்தேகத்திலிருந்தும் விலகி இருக்கிறது. இறைவனின் அறிவு மனிதர்கள் முழுமையைப் பெறுவதற்கு தனக்குள் ஒரு முழுமையான ஆற்றலை வைத்திருப்பதால் இந்த வேதம் இறையச்சமுடையோருக்கு ஒரு முழுமையான நேர்வழியைக் காட்டக் கூடியதாகும். அது அவர்களை மனித இயல்பின் முன்னேற்றங்களின் இறுதி தகுதி வரை கொண்டு செல்கிறது. இறையச்சமுடையவர்கள் மறைவாக இறைவன் மீது நம்பிக்கை கொள்கின்றனர். மேலும் அவர்கள் தொழுகையை நிலைநாட்டுகின்றனர். தனது செல்வத்திலிருந்து இறை வழியில் சிறிது வழங்குகின்றனர். திருக்குர்ஆன் மீதும் முன்னுள்ள வேதங்கள் மீதும் நம்பிக்கை கொள்கின்றனர். இவர்களே மேலான நேர்வழியில் நிலைத்திருப்பவர்களாவர். இவர்களே இரட்சிப்பு பெற்றவர்களாவர் என்று இறைவன் இந்த வசனங்களில் கூறுகின்றான். இந்த வசனங்களிலிருந்து ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொள்ளாமலும் அவர்களது வழிகாட்டல்களான தொழுகை போன்றவற்றை நிறைவேற்றாமலும் இரட்சிப்பு கிடைக்க முடியாது என்பது தெரிய வருகின்றது. ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்களைப் பற்றிப்பிடிப்பதை விட்டு விட்டு வெறுமனே காய்ந்துபோன தவ்ஹீதின் மூலம் இரட்சிப்பைத் தேடுபவர் பொய்யர்கள் ஆவர். ஆனால், இந்த விஷயத்திற்கு தீர்வு காண வேண்டியதுள்ளது. அதாவது அவர்கள் இறைவன் மீது மறைவாக நம்பிக்கை கொள்பவர்களாகவும், தொழுகையை நிறைவேற்றுபவர்களாகவும், நோன்பு நோற்பவர்களாகவும், தமது செல்வங்களிலிருந்து இறைவனது வழியில் சிறிது வழங்குபவர்களாகவும் இருக்கின்றனர். அவர்கள் திருக்குர்ஆன் மீதும் முன்னுள்ள வேதங்கள் மீதும் நம்பிக்கையும் கொண்டுள்ளனர். இந்த அளவு அவர்கள் உண்மையாளர்களாக இருக்கின்றபோது பிறகு هُدًى لِّلْمُتَّقِيْنَ அதாவது அவர்களுக்கு இந்த வேதம் நேர்வழியை வழங்கும் என்று கூறப்பட்டிருப்பதன் பொருள் என்ன? அவர்களோ இந்த எல்லா விஷயங்களையும் நிறைவேற்றி முதலிலேயே நேர்வழியைப் பெற்றவர்களாக இருக்கும்போது அவர்கள் பெற்றுக் கொண்டதையே மீண்டும் பெற வைப்பது ஒரு வீணான விஷயமாகத் தெரிகின்றது.

இதற்கான பதில் இதுவாகும். எந்த மக்கள் நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் செய்திருந்தும் தமது கொள்கையில் உறுதியாக நிற்பது மற்றும் முழுமையான முன்னேற்றத்தைப் பெறுவது ஆகியவற்றின் தேவையுடையவர்களாக இருக்கின்றனரோ அவர்களுக்கு இறைவன் மட்டுமே வழிகாட்டுகின்றான். அதில் மனித முயற்சியின் எந்த பங்கும் இல்லை. இஸ்திகாமத் (உறுதியாக நிலை நிற்றல்) என்பது உள்ளத்தில் வேரூன்றி விடுகின்ற அத்தகைய ஈமானாகும். அதாவது, எந்தவொரு சோதனையின் சமயத்திலும் ஒருபோதும் தடுமாற்றம் அடைந்து விடக் கூடாது. மேலும், எந்த ரீதியில் எந்த வழிமுறைக்கேற்ப நற்செயல்கள் செய்யப்பட வேண்டும் என்றால் அவற்றில் இன்பம் உருவாக வேண்டும். கடினமும் கசப்பும் உணரப்படக் கூடாது. அவை இல்லாமல் உயிர் வாழ முடியாது (என்ற நிலைமை இருக்க வேண்டும்). அந்த நற்செயல்கள் ஒரு வழியில் ஆன்மாவிற்குரிய உணவாக ஆகி விட வேண்டும். அதுவே அவர் சாப்பிடும் உணவாகவும் குடிக்கின்ற இனிமையான தண்ணீராகவும் ஆகி விட வேண்டும். அது அல்லாமல் அவரால் உயிர் வாழ முடியாத நிலை இருக்க வேண்டும். சுருக்கமாக, இஸ்திகாமத் (உறுதியாக நிலை நிற்றல்) தொடர்பாக எத்தகைய நிலைமைகள் உருவாகி விட வேண்டும் என்றால் அவற்றை மனிதன் தனது முயற்சியால் மட்டும் உருவாக்க முடியாது. மாறாக, எவ்வாறு ஆன்மாவிற்கு இறைவனிடமிருந்து அருள் கிடைக்கின்றதோ அவ்வாறே அசாதாரணமான உறுதியாக நிலை நிற்கும் தன்மையும் இறைவனிடம் இருந்தே உருவாக வேண்டும்.

மனித முயற்சிகளின் உச்சமாக இருக்கின்ற அந்த இறை வணக்கங்களும் ஈமானும்தான் முன்னேற்றம் என்பதன் கருத்தாகும். இதை தவிர இறைவனது கைகளால் மட்டும் உருவாகின்ற அந்த நிலைமைகள் உருவாக வேண்டும். இறைவன் மீது நம்பிக்கை கொள்வது தொடர்பாக முகம் பார்க்க முடியாமல் மறைவாக இருக்கக் கூடிய அந்த இறைவன் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும் என்ற அளவில் மட்டுமே மனிதனின் முயற்சியும் அறிவும் அவனுக்கு வழிகாட்டுகின்றது. இதன் காரணமாகவே மனிதனுக்கு அவனது சக்திக்கு அப்பாற்பட்ட அதிகமான துன்பத்தைத் தர விரும்பாத மார்க்க சட்டமானது மனிதன் தனது ஆற்றல் மூலமாக மறைவானவற்றின் மீது நம்பிக்கை கொள்வதை விட அதிகமாக ஈமானைப் பெற வேண்டும் என்பதற்காக அவனை வற்புறுத்துவதில்லை. எனினும் உண்மையாளர்கள் மறைவானவற்றின் மீது ஈமான் கொள்வதில் உறுதியான பாதங்களுடன் நிலைத்திருந்து எவற்றையெல்லாம் தமது முயற்சியினால் அவர்கள் செய்ய முடியுமோ அவற்றை செய்கின்றபோது இறைவன் ஈமானின் நிலையிலிருந்து இர்ஃபான் அதாவது இறைவனை அறிந்து அவனை அடையாளம் கண்டு கொள்ளுதல் என்ற நிலை வரை அவர்களைக் கொண்டு செல்வான். அவர்களது ஈமானில் இன்னொரு தரத்தை உருவாக்கி விடுவான் என்று உண்மையாளர்களுக்கும் هُدًى لِّلْمُتَّقِيْنَ என்ற வசனத்திலேயே வாக்குறுதி வழங்கப்பட்டிருக்கின்றது. திருக்குர்ஆனின் உண்மைக்கு இது ஓர் அடையாளமாகும். அதாவது, அதன் பக்கம் வருபவர்களை தமது முயற்சிகளின் மூலமாக அவர்கள் மேற்கொள்கின்ற அந்த ஈமானின் தகுதியிலும் செயலிலும் வைப்பதை அது விரும்பவில்லை. ஏனென்றால், அவ்வாறு இருந்தால் இறைவன் இருக்கின்றான் என்பதை எவ்வாறு அறிந்து

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

இன்று மே 27 ஆகும். ஒவ்வோர் அஹ்மதியும் அறிந்தது போன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மரணத்திற்குப் பின் இந்த நாளில்தான் கிலாஃபத் ஆரம்பமானது. அந்த அடிப்படையில் இந்த நாள் கிலாஃபத் தினமாக ஜமாஅத்தில் கொண்டாடப்படுகின்றது அல்லது இந்த நாள் அல்லாஹ்வின் வாக்குறுதி மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பு நிறைவேறிய நாளாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இரண்டாம் வல்லமை தொடர்பாக வழங்கியிருந்த நற்செய்தி நிறைவேறியதையொட்டி நாம் இந்நாளில் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகின்றோம். அல்லாஹ் நம்மை சிதறுண்டு போவதிலிருந்து காப்பாற்றி விட்டான். ஒரு தலைமையின் கீழ் ஒன்றிணைத்து விட்டான். ஒரே சரடில் கோர்த்துள்ளான். அந்த வகையில் அஹ்மதிய்யா கிலாஃபத்தை நிலைநாட்டுவதற்காகவும் எப்பொழுதும் அதனை தொடரச் செய்வதற்காகவும் இன்ஷா அல்லாஹ் எல்லா வகையான தியாகங்களுக்கும் நாங்கள் தயாராக இருப்போம் என்றும் நாம் உறுதிமொழி எடுக்கின்றோம்.

இந்த உறுதிமொழியை முழுமை செய்வதற்காக ஒரு தலைமுறைக்குப் பின் அடுத்த தலைமுறை உறுதிப்பாட்டுடன் தியாகம் செய்தனர் என்பதற்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கடந்த 108 ஆண்டுகள் சாட்சியாக இருக்கின்றன. அல்லாஹ் எதிர்காலத்தில் இப்போது ஜமாஅத்தில் இருக்கும் ஒவ்வோர் உறுப்பினருக்கும் அல்லது இனி ஜமாஅத்தில் இணைபவருக்கும் எப்பொழுதும் இந்த உறுதிமொழியை நிறைவேற்றும் பாக்கியத்தை அல்லாஹ் வழங்குவானாக!

நாம் ஏகத்துவத்தில் நிலைநின்று மனித இனத்தின் மீதான அனுதாபத்தில் முன்னேறிக் கொண்டே சென்றவாறு அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் தொடர்புடையவர்களாக இருந்தால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் அல்லாஹ் வழங்கியுள்ள அனைத்து முன்னேற்றங்களுக்கான வாக்குறுதியும் நிறைவேறுவதை நாம் காணக்கூடியவர்களாக இருப்போம்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தோற்றுவித்த ஜமாஅத் முன்னேற்றங்களை அடையும் என்பதில் எந்த சந்தேகமுமில்லை. அல்லாஹ்விற்குரிய உரிமைகளையும் அடியார்களுக்குரிய உரிமைகளையும் வழங்குவதில் நாம் என்ன செய்கின்றோம் என்று நம்மை நாமே ஆய்வு செய்ய வேண்டும். உலகின் பார்வையும் நம் பக்கம் உள்ளது. அல்லாஹ்வும் இந்தப் பணியை நம்மிடம் ஒப்படைத்துள்ளான். அதாவது, ஏகத்துவத்தை நிலைநாட்ட வேண்டும். மேலும் நாமும் இறை நெருக்கத்தைப் பெற வேண்டும். தன்னைப் படைத்த ஏக இறைவனின் பக்கம் உலகை கொண்டு வர முயற்சி செய்ய வேண்டும். மனித இனத்தின் கண்ணியத்தை நிலைநாட்ட முயற்சி செய்ய வேண்டும்.

எந்த நோக்கங்களை அடைவதற்காக அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அனுப்பினார்களோ அதுவே அஹ்மதிய்யா கிலாஃபத் மற்றும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நோக்கமாகும். மனிதனை இறைவனுக்கு அருகில் கொண்டு செல்ல முழு முயற்சி செய்வதும், மனித இனத்திற்குரிய உரிமைகளை வழங்குவதும் மட்டுமே அந்த நோக்கங்களாகும். இதனை தவிர்த்து நமக்கு வேறெந்த நோக்கமும் கிடையாது.

அல்லாஹ்வின் அருளால் இந்தப் பயணத்தில் ஊடகங்களின் ஏராளமான நேர்காணல் என்னுடன் நடைபெற்றது. மால்மோ பள்ளிவாயில் திறப்பு விழா மட்டுமின்றி டென்மார்க்கிலும், ஸ்டாக்ஹோமிலும் இரண்டு வரவேற்பு நிகழ்ச்சிகள் நடந்தன. அதில் இஸ்லாம் மற்றும் திருக்குர்ஆனின் உண்மையான போதனைகள் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உயரிய முன்மாதிரிகளின் ஒளியிலும் நேர்வழி பெற்ற கலீஃபாக்களின் முன்மாதிரிகளிலிருந்து விஷயங்கள் எடுத்துரைக்கப்பட்டன. இன்று எங்களுக்கு இஸ்லாத்தின் உண்மையான போதனை தெரிய வந்தது என பெரும்பாலார் வெளிப்படையாக ஒப்புக் கொண்டனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்குப் பிறகு நிலைபெற்றுள்ள கிலாஃபத் அமைப்பு அல்லது கிலாஃபத் தன்னை ஏற்றுக் கொண்டவர்களுக்கு மட்டும் வழிகாட்டவில்லை. அவ்வாறே, அந்நியர்களுக்கும் இஸ்லாத்தின் எதிரிகளுக்கும் அல்லது இஸ்லாத்தின் மீது அச்சம் கொள்பவர்களுக்கும் கூட உண்மையான இஸ்லாமிய போதனைகளின் உதாரணங்களை அது முன் வைக்கின்றது.

டென்மார்க் மற்றும் சுவீடனில் ஹுஸூர் அவர்கள் மேற்கொண்டுள்ள இப்போதைய சுற்றுப் பயணத்தின்போது நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகள் ஹுஸூர் அவர்களுடன் வீடியோ மற்றும் டி.வி -யில் அவ்வறே பத்திரிகை நிருபர்களுடன் நடைபெற்ற நேர்காணல்கள், நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விருந்தினார்களுக்கு ஏற்பட்ட தாக்கங்கள் ஆகியவற்றைப் பற்றி ஹுஸூர் அவர்கள் ஈமானுக்கு எழுச்சியூட்டும் வகையில் எடுத்துக் கூறினார்கள். பத்திரிகைகள் மற்றும் ஊடகங்கள் மூலமாக இலட்சக்கணக்கான நபர்கள் வரை இஸ்லாத்தின் தூதுச் செய்தி எட்டியது.

உண்மையான கிலாஃபத் தம்மவர்களின் (தம்மை ஏற்றுக் கொண்டவர்களின்) அச்சத்தை மட்டும் அமைதியில் மாற்றுவதில்லை. அந்நியர்களின் அச்சத்தையும் அமைதியின் நிலையாக மாற்றுகின்றது. நான் எடுத்துரைத்த பல்வேறு தரப்பட்ட நபர்களின் தாக்கங்களில் பெரும்பாலும் இதுவே கூறப்பட்டுள்ளது. அதாவது அவர்களின் அச்சத்தின் நிலை நமது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதன் மூலம் அமைதியின் நிலையாக மாறி விட்டது. இது அல்லாஹ்வின் வாக்குறுதியாகும். இதன் காரணமாக அல்லாஹ்வின் உதவிகளும் நம்முடன் இருக்கின்றது. அது இஸ்லாத்தின் அழகிய போதனைகள் மூலம் பிறர் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

எனவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை விட்டு விலகிச் சென்று இக்காலத்தில் ஒருவர் கிலாஃபத்தை நிலை நாட்ட விரும்பினால் அவர் தோல்வி அடைவார். அவரால் அமைதியை ஏற்படுத்த முடியாது.

ஆனால், அஹ்மதிய்யா கிலாஃபத் மட்டுமே தன்னை ஏற்றுக் கொண்டவர்கள் மற்றும் அந்நியர்களின் அச்சத்தை அமைதியின் நிலையாக மாற்றுகின்றது. பல்வேறு தரப்பட்ட நபர்களின் தாக்கங்களிலிருந்தும் அது தெளிவாகிறது. அல்லாஹ்வின் உதவி ஒத்தாசைக்கான சாட்சிகள் அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் உள்ளது. அது ஒருபோதும் குறைவதில்லை என்பதும் நிரூபணமாகிறது. நான் கூறியதுபோன்று கடந்த 108 ஆண்டு கால வரலாறு இதற்கு சாட்சியாக உள்ளது. இது ஒரு மனிதனின் வேலையாக இருந்திருந்தால் எப்போதோ முடிந்து போயிருக்கும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்தின் தோற்றம் மற்றும் கிலாஃபத் பற்றிய வாக்குறுதி இறைவனின் வாக்குறுதியாகும். மேலும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்தில் அதனை முடித்து விட மக்கள் முயன்றனர். இப்போது இந்த கிலாஃபத் மற்றும் இந்த அமைப்பு அல்லாஹ்வின் அருளால் நிரந்தரமாக நிலைபெறக் கூடியதாகும்.

நாம் நமது வசதி வாய்ப்புகளை எண்ணிப் பார்த்தால் இத்தனை பெரிய எண்ணிக்கை வரை இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைக்க முடியும் என நம்மால் கற்பனை கூட செய்ய முடியாது. ஆனால், அல்லாஹ்வின் தக்தீர் இந்த தூதுச் செய்தியை பூமியின் எல்லை வரை கொண்டு சேர்க்க வேண்டும் என தீர்மானித்து விட்டால் பின்னர் இந்த முன்னேற்றங்களைத் தடுத்து நிறுத்தக் கூடியவர் யார் இருக்கின்றார்? எந்த உலகச் சக்தியாலும் இதனை தடுத்து நிறுத்த முடியாது.

நன்கானாவைச் சார்ந்த மதிப்பிற்குரிய மாஸ்டர் குலாம் முஹம்மது சாஹிப் அவர்களின் மகனான மதிப்பிற்குரிய சவுத்ரி ஃபஸல் அஹ்மது சாஹிப் வக்ஃப் அவர்களின் ஹாஸிர் ஜனாஸா தொழுகையும், கராச்சியைச் சார்ந்த மதிப்பிற்குரிய ஹாஜி குலாம் முஹிய்யுத்தீன் சாஹிப் அவர்களின் மகனான மதிப்பிற்குரிய தாவூது அஹ்மது சாஹிப் ஷஹீது மற்றும் பேரோவைச் சார்ந்த மதிப்பிற்குரிய மவ்லவி முஹம்மது அஷ்ரஃப் சாஹிப் அவர்களின் மகனான மதிப்பிற்குரிய முஹம்மது அஃஸம் அக்ஸுர் சாஹிப் ஆகியோரின் காயிஃப் ஜனாஸா தொழுகையும் நிறைவேற்றப்பட்டு மர்ஹூமீன்களின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டன.

# ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 27 மே 2016** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு 27 ஹிஜ்ரத் மாதம் ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِينَ . الرَّحْمٰنِ الرَّحِيمِ . مٰلِكِ يَوْمِ الدِّينِ . إِيَّاكَ نَعْبُدُ

وَ إِيَّاكَ نَسْتَعِينُ . اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ . صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ .

இன்று மே 27 ஆகும். ஒவ்வோர் அஹ்மதியும் அறிந்தது போன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மரணத்திற்குப் பின் இந்த நாளில்தான் கிலாஃபத் ஆரம்பமானது. அந்த அடிப்படையில் இந்த நாள் கிலாஃபத் தினமாக ஜமாஅத்தில் கொண்டாடப்படுகின்றது அல்லது அல்லாஹ்வின் வாக்குறுதி மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பு நிறைவேறிய நாளாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இரண்டாம் வல்லமை தொடர்பாக வழங்கியிருந்த நற்செய்தி நிறைவேறியதையொட்டி நாம் இந்நாளில் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகின்றோம். அல்லாஹ் நம்மை சிதறுண்டு போவதிலிருந்து காப்பாற்றி விட்டான். ஒரு தலைமையின் கீழ் ஒன்றிணைத்து விட்டான். ஒரே சரடில் கோர்த்துள்ளான்.

அந்த வகையில் அஹ்மதிய்யா கிலாஃபத்தை நிலைநாட்டுவதற்காகவும் எப்பொழுதும் அதனை தொடரச் செய்வதற்காகவும் இன்ஷா அல்லாஹ் எல்லா வகையான தியாகங்களுக்கும் நாங்கள் தயாராக இருப்போம் என்றும் நாம் உறுதிமொழி எடுக்கின்றோம். இந்த உறுதிமொழியை முழுமை செய்வதற்காக ஒரு தலைமுறைக்குப் பின் அடுத்த தலைமுறை உறுதிப்பாட்டுடன் தியாகம் செய்தனர் என்பதற்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கடந்த 108 ஆண்டுகள் சாட்சியாக இருக்கின்றன. அல்லாஹ் எதிர்காலத்தில் இப்போது ஜமாஅத்தில் இருக்கும் ஒவ்வோர் உறுப்பினருக்கும் அல்லது இனி ஜமாஅத்தில் இணைபவருக்கும் எப்பொழுதும் இந்த உறுதிமொழியை நிறைவேற்றும் பாக்கியத்தை அல்லாஹ் வழங்குவானாக!

மனிதனை இறைவனிடம் நெருங்கச் செய்வது அல்லாஹ்வுக்குரிய அனைத்து உரிமைகளையும் வழங்குவது மற்றும் மனிதர்கள் ஒருவர் மற்றவருக்குரிய உரிமைகளை வழங்குவதன் பக்கம் அவர்களுக்கு கவனமூட்டுவது ஆகியவை தனது வருகையின் நோக்கம் என ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். அல் வஸிய்யத் என்ற தனது நூலில் கூட கிலாஃபத் நிலைபெறுவது தொடர்பாக நற்செய்தி வழங்கியவாறு மேற்கூறிய விஷயங்களை நாம் நமது வாழ்வின் அங்கமாக்கிக் கொள்ள வேண்டும் என நமக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கவனமூட்டியுள்ளார்கள்.

அல் வஸிய்யத் எனும் நூலில் ஓரிடத்தில் அன்னார் கூறுகின்றார்கள்: ''நீங்கள் முழுமையாக இறைவன் பக்கம் குனிந்து விட்டால் நான் உங்களுக்கு இறை விருப்பத்தின் பெயரில் கூறுகின்றேன். பின்னர் நீங்கள் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சமுதாயமாகி விடுவீர்கள். இறைவனின் மகத்துவத்தை உள்ளங்களில் நிலைநாட்டுங்கள். இறைவனும் செயல்ரீதியாக உங்கள் மீது தனது கருணையை வெளிப்படுத்த நீங்கள் வெறும் நாவினால் மட்டும் அல்லாமல், செயல் ரீதியாகவும் ஏகத்துவத்தை ஒப்புக் கொள்ளுங்கள்.''

மேலும் கூறுகின்றார்கள்: ''பகைமை கொள்வதிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். மேலும் மனித இனத்திடம் உண்மையான அனுதாபத்துடன் நடந்து கொள்ளுங்கள். நன்மைக்குரிய அனைத்து வழிகளையும் மேற்கொள்ளுங்கள். ஏனென்றால் எந்த வழியில் நீங்கள் ஒப்புக் கொள்ளப்படுவீர்கள் என்பது தெரியாது.'' (அல் வஸிய்யத். ரூஹானி கஸாயின் தொகுதி 20, பக்கம் 309)

எனவே, நாம் ஏகத்துவத்தில் நிலைநின்று மனித இனத்தின் மீதான அனுதாபத்தில் முன்னேறிக் கொண்டே சென்றவாறு அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் தொடர்புடையவர்களாக இருந்தால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் அல்லாஹ் வழங்கியுள்ள அனைத்து முன்னேற்றங்களுக்கான வாக்குறுதியும் நிறைவேறுவதை நாம் காணக் கூடியவர்களாக இருப்போம். அல்லாஹ்விடமிருந்து ஞானம் பெற்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு அதை பற்றிய நற்செய்தியையும் வழங்கியுள்ளார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: இறைவன் உங்களை வீணாக்கி விடுவான் என்று எண்ணம் கொள்ளாதீர்கள். நீங்கள் இறைவனின் கரங்களால் பூமியில் விதைக்கப்பட்ட ஒரு விதை ஆவீர்கள். இந்த விதை வளரும். மேலும் எல்லா திசைகளிலும் இதன் கிளைகள் பரவும். மேலும் ஒரு மாபெரும் மரமாகி விடும் என்று இறைவன் கூறுகின்றான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தோற்றுவித்த ஜமாஅத் முன்னேற்றங்களை அடையும் என்பதில் எந்த சந்தேகமுமில்லை. அல்லாஹ்விற்குரிய உரிமைகளையும் அடியார்களுக்குரிய உரிமைகளையும் வழங்குவதில் நாம் என்ன செய்கின்றோம் என்று நம்மை நாமே ஆய்வு செய்ய வேண்டும். உலகின் பார்வையும் நம் பக்கம் உள்ளது. அல்லாஹ்வும் இந்தப் பணியை நம்மிடம் ஒப்படைத்துள்ளான். அதாவது, ஏகத்துவத்தை நிலைநாட்ட வேண்டும். மேலும் நாமும் இறை நெருக்கத்தைப் பெற வேண்டும். தன்னைப் படைத்த ஏக இறைவனின் பக்கம் உலகை கொண்டு வர முயற்சி செய்ய வேண்டும். மனித இனத்தின் கண்ணியத்தை நிலைநாட்ட முயற்சி செய்ய வேண்டும்.

கடந்த நாட்களில் நான் ஸ்கேன்டினேவியா நாடுகளின் சுற்றுப் பயணத்தில் இருந்தேன். உங்களின் நோக்கம் என்ன? என்று சில பத்திரிகை நிருபர்களும், அறிஞர்களும் என்னிடம் கேட்டனர். எந்த நோக்கங்களை அடைவதற்காக அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அனுப்பினார்களோ அதுவே அஹ்மதிய்யா கிலாஃபத் மற்றும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நோக்கமாகும் என்று நான் கூறினேன். மேலும், மனிதனை இறைவனுக்கு அருகில் கொண்டு செல்ல முழு முயற்சி செய்வதும், மனித இனத்திற்குரிய உரிமைகளை வழங்குவதும் மட்டுமே அந்த நோக்கங்களாகும். இதனை தவிர்த்து நமக்கு வேறெந்த நோக்கமும் கிடையாது. ஏனென்றால், இன்றைய காலத்தில் நாம் பார்க்கின்றோம். உலகம் இறைவனை மறந்து வருகிறது. பொதுவாக மனித இனத்திற்கு தொண்டு செய்கின்றோம் என்ற பெயரில் தனது சுயநலனை அடையும் நோக்கத்தில் தொண்டாற்றப்படுகின்றது. அதன் மூலமாக நிம்மதியின்மை மேலும் அதிகரித்து விடுகின்றது. நாடுகள் மற்றும் சமுதாயங்களுக்கு இடையிலான தொடர்புகளில் விரிசல் ஏற்பட்டு வருகின்றது. இக்காலத்தில் சுயநலமின்றி இறை திருப்தியைப் பெறுவதற்காக மட்டும் எவ்வாறு நீங்கள் பணி செய்ய முடியும்? என்று உலகவாதிகள் ஆச்சரியமடைகின்றனர். அன்பு, நேசம் என்ற பெயரில் அஹ்மதிகளாகிய நீங்கள் மக்களை நெருங்குகின்றீர்கள் அல்லது மக்களை உங்கள் பக்கம் கொண்டு செல்ல முயல்கின்றீர்கள். ஆனால், எதிர்காலத்தில் நீங்கள் வலிமை பெற்று விடும் போது அல்லது ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர் உங்கள் நோக்கங்கள் வெளிப்பட்டு விடலாம். அதற்காகவே நீங்கள் இந்த வழிமுறையை மேற்கொண்டுள்ளீர்கள் என உலகவாதிகள் நம்மைப் பற்றி எண்ணம் கொள்கின்றனர்.

ஸ்டாக்ஹோம் பல்கலைக்கழக இஸ்லாமிய நூலாசிரியர் ஒரு சந்தர்ப்பத்தில் இதுபோன்ற கேள்வி ஒன்றைக் கேட்டார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இந்த கவிதை வரிகளில் நான் அவருக்கு பதில் அளித்தேன். அந்த பதில் இதுவாகும். '*எனக்கு நாடுகளோடு எந்தப் பொருட்டும் இல்லை. என்னுடைய நாடே முற்றிலும் தனித்த ஒன்றாகும். என்னிடம் பதவிகளுக்கு எந்தப் பொருட்டும் இல்லை. எனது அன்பனின் திருப்தியே எனக்கான பதவியாகும்.*' இவையே, அஹ்மதிய்யா கிலாஃபத் மற்றும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நோக்கங்களாகும்.

அல்லாஹ்வின் அருளால் இந்தப் பயணத்தில் ஊடகங்களின் ஏராளமான நேர்காணல் என்னுடன் நடைபெற்றது. மால்மோ பள்ளிவாயில் திறப்பு விழா மட்டுமின்றி டென்மார்க்கிலும், ஸ்டாக்ஹோமிலும் இரண்டு வரவேற்பு நிகழ்ச்சிகள் நடந்தன. அதில் இஸ்லாம் மற்றும் திருக்குர்ஆனின் உண்மையான போதனைகள் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உயரிய முன்மாதிரிகளின் ஒளியிலும் நேர்வழி பெற்ற கலீஃபாக்களின் முன்மாதிரிகளிலிருந்து விஷயங்கள் எடுத்துரைக்கப்பட்டன. இன்று எங்களுக்கு இஸ்லாத்தின் உண்மையான போதனை தெரிய வந்தது என பெரும்பாலோர் வெளிப்படையாக ஒப்புக் கொண்டனர். இப்போது உலகின் பல்வேறு பகுதிகளில் 'அமைதி' என்ற தலைப்பில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மூலமாக பல கூட்டங்களும், மாநாடுகளும் கருத்தரங்குகளும் நடைபெறுகின்றன. அதில் மக்கள் இதனையே வெளிப்படுத்துகின்றனர். மேலும், உலகின் எல்லா இடங்களிலும் ஒரே தலைப்பில் ஒன்றுபோல் முயற்சி செய்யப்படுகின்றது. மேற்கிலும், கிழக்கிலும், தெற்கிலும், வடக்கிலும் இந்நிலை தென்படுகின்றது என்றால், அதற்குக் காரணம் அஹ்மதிய்யா ஜமாஅத் கிலாஃபத்துடன் தொடர்பு கொண்டுள்ளது. மேலும், கிலாஃபத்தின் வழிகாட்டலின்படி அது பணி செய்கின்றது. நான் கூறியது போன்று இஸ்லாத்தின் உண்மையான போதனை இன்றுதான் எங்களுக்கு தெரிய வந்துள்ளது என பெரும்பாலோர் கூறினர். மேலும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கலீஃபாவின் மூலமாக இன்று எங்களுக்கு இஸ்லாத்தின் உண்மையான போதனை கிடைத்தது என்றும் அதில் கூறுகின்றனர்.

எனவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்குப் பிறகு நிலைபெற்றுள்ள கிலாஃபத் அமைப்பு அல்லது கிலாஃபத் தன்னை ஏற்றுக் கொண்டவர்களுக்கு மட்டும் வழிகாட்டவில்லை. மாறாக, அந்நியர்களுக்கும் இஸ்லாத்தின் எதிரிகளுக்கும் அல்லது இஸ்லாத்தின் மீது அச்சம் கொள்பவர்களுக்கும் கூட உண்மையான இஸ்லாமிய போதனைகளின்

உதாரணங்களை முன் வைக்கின்றது. நமது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் அந்நியர்களுக்கு என்ன தாக்கம் ஏற்படுகின்றது? அது பற்றிய சில உதாரணங்களை நான் தற்போது எடுத்துக் கூறுகிறேன்.

டென்மார்க்கில் ஒரு ஹோட்டலில் வரவேற்பு நிகழ்ச்சி நடந்தது. அதில் பாராளுமன்ற உறுப்பினரும் வந்திருந்தார். அவர் அந்த நாட்டின் மார்க்கம் மற்றும் கலாச்சார அமைச்சர் ஆவார். மேயரும், அரசியல்வாதிகளும், அறிஞர்களும், தூதரக அதிகாரிகளும் அதில் கலந்து கொண்டனர். அவர்கள் அனைவரும் நிகழ்ச்சியைப் பார்த்தனர்; கேட்டனர். மேலும், 'இங்கு எங்களுக்கு இஸ்லாத்தைப் பற்றிய சரியான அறிவு கிடைத்தது' என அவர்களில் எந்த வேறுபாடும் இல்லாமல் அனைவரும் கூறினர்.

டென்மார்க்கின் ஒரு விருந்தாளி ஸ்டென்ஹாஃப்ட்மேன் கூறினார்: "கலீஃபாவின் சொற்பொழிவைக் கேட்டு எனக்கு மிகவும் மன நிறைவும் மகிழ்ச்சியும் ஏற்பட்டது. இன்றைய காலத்தில் இதுபோன்ற தூதுச் செய்தி மிகவும் அவசியமானதாகும். ஸ்கேன்டிநேவியாவில் கலீஃபாவின் கூற்றுகள் சிறந்த முறையில் புரிந்து கொள்ளப்பட வேண்டும்."

அடுத்து டென்மார்க்கின் நாக்ஸ்கோ என்றவொரு நகரம் உள்ளது. அங்கிருந்து பெரிய அளவில் மக்கள் வந்திருந்தனர். அந்த நகரத்தின் மேயரும், பிற அரசியல்வாதிகளும், பிற கல்வியறிவு பெற்ற மக்களும் வந்திருந்தனர். அவர்களது கவுன்ஸிலின் ஓர் உறுப்பினர் கூறுகின்றார்: "இலட்சக்கணக்கான முஸ்லிம்கள் எந்த அச்சமும் இல்லாமல் அமைதியை நிலைநாட்ட ஒளிமயமான ஒரு மினாராவைப் போன்று நிற்கின்றனர் என்பதை அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அந்த மக்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் தொடர்புடையவர்கள் ஆவர்."

அடுத்து ஒரு விருந்தாளி கூறினார்: "கலீஃபாவின் சொற்பொழிவிற்குப் பிறகு எனது மேஜையில் அமர்ந்திருந்த அனைவரும் தாங்கள் இஸ்லாத்தை சரியாகப் புரிந்து கொண்டதாக பேசிக் கொண்டிருந்தனர். இஸ்லாம் மிக அழகிய முறையில் எடுத்து வைக்கப்பட்டுள்ளது என்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும் என மக்கள் பேசிக் கொண்டனர். டேனிஷ் நாட்டு மக்கள் இஸ்லாத்தைப் பற்றி அறிந்திருக்கவே இல்லை; இஸ்லாத்தில் ஏராளமான பிரிவுகள் உள்ளன. அதில் அமைதியை விரும்பும் மக்களும் உள்ளனர் என்பதும் அவர்களுக்கு தெரியாது."

மேலும் அவர் கூறினார்: "என்னைப் பொருத்தவரையில் இதனை கூறுவது மிகவும் அவசியமாகும். அதாவது, இந்த சொற்பொழிவில் கலந்து கொண்ட அனைத்து விருந்தினர்களும இன்று ஒரு புதிய உறுதியுடன் தத்தமது வீடுகளுக்குத் திரும்பிச் செல்வர் என நான் நம்புகின்றேன்."

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பற்றிய தவறான சித்திரம் வரைவதற்கான அடித்தளம் முதலில் டென்மார்க்கில்தான் அமைக்கப்பட்டது. அவர்களிடம் நான் இதனையே கூறினேன். இதன் மூலம் வெறுப்பே தோன்றும். அமைதி சீர்கெட்டு விடும். அழிவும், நாசமும்தான் ஏற்படும். அதனை தவிர ஒன்றும் கிடைக்காது என்று நான் கூறினேன். இவ்விஷயம் எங்களைப் பொருத்தவரையில் மிகவும் உணர்வுப்பூர்வமானதாகும். ஆனால், நீங்கள் எந்த வழிமுறையில் எங்களுக்கு புரிய வைத்தீர்களோ அதன் மூலம் எங்களுக்கு மிக அழகாக விஷயம் புரிந்து விட்டது என்று அவர்கள் நம்மிடம் ஒப்புக் கொண்டனர்.

ஒரு விருந்தினர் கூறினார்: "இன்றைய இந்த சொற்பொழிவிற்குப் பிறகு இஸ்லாத்தைப் பற்றிய மக்களின் எண்ணங்களில் கண்டிப்பாக மாற்றம் ஏற்படும். நான் இஸ்லாத்தை இந்த முறையில் புரிவதற்காக ஒரு திருக்குர்ஆனையும் வாங்கியுள்ளேன். அதில் அடிக்குறிப்புகளும் உள்ளன. இன்றைய மாலைப் பொழுதிற்குப் பிறகு எனது குறைமதியைப் பற்றிய உணர்வும் எனக்கு ஏற்பட்டுள்ளது. நான் திருக்குர்ஆனை படித்து வருவேன் என்றும் அவர் கூறினார்."

நான் கூறியது போன்று நாக்ஸ்கோவிலிருந்தும் மக்கள் வந்திருந்தனர். அவர்கள் சொற்பொழிவிற்குப் பிறகு வீடு திரும்பினர். ஒரு விருந்தினர் எழுதியுள்ளார். பெரும் வார்த்தைகயில் நன்றியெல்லாம் கூறிய பிறகு கூறுகின்றார்: "Conference –ல் நாங்கள் கழித்த நேரங்கள் எங்கள் வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாத தருணங்களாக இருக்கும். நாங்கள் வீடு திரும்பும் வரை எங்களது பயணத்தில் எங்களது Coach –ல் ஒரு சிறப்பான சூழல் நிலவியது. பயணம் முழுவதும் அந்த Conference –ஐப் பற்றியே பேசப்பட்டது. நாம் இன்று ஒரு நல்ல நாளை செலவழித்துள்ளோம். நமக்கு இன்று அதிகமாக கற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு கிடைத்தது என அனைவருமே ஒப்புக் கொண்டனர்."

ஒரு நிருபர் தமது உணர்வுகளை இவ்வாறு வெளிப்படுத்துகிறார்: "நான் அதிகமாக கற்றுக் கொண்டேன். கலீஃபாவின் சொற்பொழிவு என்னை சிந்திக்கும்படி கட்டாயப்படுத்தி விட்டது. குறிப்பாக ஊடகங்களில் காட்டப்படும் இஸ்லாத்தின் வடிவம் உண்மையிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். கலீஃபாவின் எந்தக் கூற்றையும் என்னால் விமர்சிக்க முடியாது. ஏனெனில் அன்னாரின் அனைத்து கூற்றுகளும் அன்பு, நேசம் மற்றும் ஒருவர் மற்றவரை கண்ணியப்படுத்துதல் தொடர்பாகவே அமைந்திருந்தது. இவ்விஷயங்களே அமைதிக்கான திறவுகோல்கள் ஆகும் என்று கலீஃபா கூறினார்கள். அன்னார், மற்றுமோர் உலகப்போரின் அபாயங்களைப் பற்றி நமக்கு எடுத்துரைத்தார்கள். நான் தற்போது கவலைக்குள்ளாகி விட்டேன். நாம் மற்றுமோர் உலகப்போருக்கு அருகில் உள்ளோம் என இதற்கு முன்பும் ஓரிரு நபரிடமிருந்து கேட்டுள்ளேன். ஆனால், அதனை நான் நம்பவில்லை. இன்று எனது எண்ணம் மாறி விட்டது. இதனை நான் மிகவும் அக்கறையுடன் பார்க்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்து விட்டேன். நான் சிந்திக்கும் வகையில் கலீஃபா அவர்கள் விஷயங்களை எடுத்துரைத்து விட்டார்கள்."

அடுத்து ஒரு பெண் விருந்தினர் தமது உணர்வுகளை இவ்வாறு எடுத்துரைக்கின்றார்: "கலீஃபா கூறிய விஷயங்கள் சிந்திக்கும்படி நம்மை கட்டாயப்படுத்தி விட்டது. ஆனால், நான் ஒரு வகையில் கவலைக்குள்ளாகி விட்டேன். ஏனென்றால் எதிர்காலத்தைப் பற்றி கலீஃபா அவர்கள் ஒரு அபாயகரமான சித்திரத்தை வரைந்துள்ளார்கள். அன்னார் போரின் அபாயங்களிலிருந்து நம்மை எச்சரிக்கை செய்தார்கள். அமைதிக்காக முயற்சி செய்வதற்கு இதுவே தருணமாகும். இல்லையென்றால் பின்னர் வருத்தப்படுவீர்கள் என்றும் கூறினார்கள்."

அடுத்து ஒரு டேனிஷ் பெண் விருந்தினர் கூறுகின்றார்: "நேற்று வரை நான் இஸ்லாத்தைப் பற்றிய எதிர்மறை விஷயங்களையே அறிந்திருந்தேன். ஆனால், இன்று நான் நல்ல, அமைதி நிறைந்த இஸ்லாத்தின் தூதுச் செய்தியை செவிமடுத்துள்ளேன். ISIS இஸ்லாம் அல்ல என்பதை நான் கற்றுக் கொண்டேன். எல்லா மதங்களின் வணக்கஸ்தலங்களும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே இஸ்லாத்தின் போதனை என்பதையும் நான் கற்று கொண்டேன்."

மற்றுமொரு டேனிஷ் விருந்தினர் கூறினார்: "ஊடகங்கள் வாயிலாக காட்டப்படும் இஸ்லாம் தவறானது என்பதை நிரூபித்துக் காட்டும் ஒரு மனிதரை இன்று நான் சந்தித்துள்ளேன். நான் மிகவும் உணர்ச்சிவசப்பட்டேன். மேலும் நான் உணர்வுமிக்கவராகத் திகழ்கிறேன். ஜிஹாதின் அர்த்தத்தை கற்றுக் கொடுத்த ஒரு மனிதரை நான் இன்று சந்தித்தேன். ஊடகங்களின் கருத்து சுதந்திரம் மற்றும் உலகில் அமைதியை நிலைநாட்டுதல் தொடர்பான அன்னாரின் கருத்துக்கள் என்னைக் கவர்ந்தன."

அடுத்து ஒரு டேனிஷ் விருந்தினர் கூறினார்: "கலீஃபா தனது சொற்பொழிவில் திருக்குர்ஆனின் ஆதாரங்களை எடுத்து வைத்தார். இதிலிருந்து அன்னாரது கருத்துக்கள் சுயமாக உருவாக்கிக் கொண்டதல்ல. மாறாக, உண்மையை அடிப்படையாகக் கொண்டவை என்பதும் தெரிய வருகின்றது. மேற்கத்திய நாடுகளில் முஸ்லிம்களின் ஒருங்கிணைப்பு என்பது இந்த விஷயங்களிலிருந்து நிரூபணமாகின்றது. ஏனென்றால், இஸ்லாம் மேற்கத்திய சிந்தனைகளுக்கு எதிரானது அல்ல. ஏனென்றால் அமைதி சமத்துவம் ஒருவர் மற்றவரை மதிப்பது அனைவரின் கூட்டுப் பொறுப்பாகும் என்று அன்னார் கூறினார்கள். உண்மையைக் கூற வேண்டும் என்றால் டேனிஷ் மக்கள் முஸ்லிம்களைக் கண்டும் மத்திய கிழக்கு நாடுகளில் நிகழும் சண்டைகளைக் கண்டும் மிகவும் அச்சப்படுகின்றனர். ஆனால், அங்கு நடப்பவற்றுக்கு ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களோ அல்லது அன்னாரது மார்க்கத்தின் தவறுகளோ காரணங்கள் அல்ல என்பதை குறைந்தபட்சம் இன்று நாம் அறிந்து கொள்கின்றோம். உண்மையில் அன்னாரது போதனைக்கு எதிராக அவர்கள் செயல்படுகின்றனர்."

ஒரு பல்கலைக்கழக மாணவர் கூறுகின்றார்: "கலீஃபாவின் சொற்பொழிவின் கருத்துக்கள் மிகத் தெளிவானதாகும். இஸ்லாத்தின் கோட்பாடுகள் மிகத் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது. அது எப்படிப்பட்டதென்றால் நாம் அனைவரும் அதனைப் பின்பற்ற வேண்டும். இஸ்லாம் அமைதி நிறைந்த ஒரு மார்க்கமாகும் என்பதை திருக்குர்ஆனின் ஒளியிலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்னுதாரணங்களின் ஒளியிலும், கலீஃபாக்களின் வாழ்வின் அடிப்படையிலும் என்னிடமும், ஏனைய விருந்தினர்களிடமும் ஆதாரப்பூர்வமாக கலீஃபா அவர்கள் நிரூபணம் செய்து விட்டார்கள். இது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. மேலும், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நோக்கங்களையும் தெளிவுபடுத்தினார்கள். இதிலிருந்து உண்மை இஸ்லாத்தைப் புரிந்து கொள்வதற்கான வாய்ப்பு கிடைத்தது."

மற்றொரு விருந்தினர் தமது உணர்வுகளை இவ்வாறு வெளிப்படுத்துகிறார்: "கலீஃபா அவர்கள் நமது சந்ததிகள் சந்தித்து வரும் பிரச்சனைகளை எந்த வழிமுறையில் நமக்கு எடுத்துரைத்தார்களோ, அதற்கான திருக்குர்ஆனின் அடிப்படையாகக் கொண்டு எடுத்து வைத்த தீர்வுகளும் மிகவும் உயர்வானவை ஆகும். திருக்குர்ஆன் நீதியைப் பற்றி இந்த அளவிற்கு போதிக்கின்றது என்பது எனக்கு இதற்கு முன் ஒருபோதும் தெரியாது. இஸ்லாத்தைப் பற்றிய எனது எண்ணங்கள் இன்று முற்றிலும் மாறி விட்டது. இதற்கு முன் ஊடகங்கள் கூறும் இஸ்லாத்தை மட்டுமே அறிந்திருந்தேன். ஆனால், இன்று மற்றொரு பக்கத்தில் உண்மையைக் கண்டு கொண்டேன். கலீஃபா அவர்கள் திருக்குர்ஆன் கூறும் அமைதி பற்றிய போதனைகளுக்கு உதாரணம் ஒன்றையும் கூறினார்கள். மனிதன், தான் விரும்பாத நபரிடமும் நீதியுடன் நடந்து கொள்ள வேண்டும் என்ற குறிப்பு அதில் இடம் பெற்றுள்ளது. மேலும் ஆரம்ப கால முஸ்லிம்கள் யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களுடன் அன்புடன் நடந்தனர் என்று கூறிய கருத்தும் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. இவ்விஷயம் எனது உள்ளத்தில் மிக ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது."

அடுத்து Humanist Society உடன் தெடர்புடைய ஒரு பெண்மனி கூறுகின்றார்: "அமைதி நிறைந்த தூதுச் செய்தியைப் பற்றி மக்களுக்கு மிகக்

குறைவாகவே அறிவு உள்ளது. ஊடகங்கள் தீய விஷயங்களை மட்டுமே கண்முன் கொண்டு விடுகின்றது. நல்ல விஷயங்களைப் பற்றி எதுவும் கூறுவதில்லை. டேனிஷின் அனைத்து ஊடகங்களும் இங்கு வந்திருக்க வேண்டும். நான் எனது நாட்டு மக்களின் இந்த நடைமுறையினால் மிகவும் நம்பிக்கை இழந்துள்ளேன்.''

அடுத்து ஒரு டேனிஷ் பெண்மணி கூறினார்: ''எனக்கு இஸ்லாத்தைப் பற்றி எதுவும் தெரியாமல் இருந்தது. ஆனால் இன்று நான் அதிகம் கற்றுக் கொண்டேன். இவ்வாறாக உங்களது கலீஃபா எனது ஆசிரியர் ஆவார் என்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இஸ்லாம் அமைதி நிறைந்த மார்க்கம் என நான் மகிழ்ச்சியடைகிறேன். இஸ்லாம் அமைதி நிறைந்த மார்க்கம் என நான் ஒப்புக் கொள்கிறேன். மக்கள் இந்த தூதுச் செய்தியின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும் என நான் ஆசைப்படுகிறேன். மேலும், இந்த சொற்பொழிவின் அனைத்து வாக்கியங்களையும் மிக நன்றாகப் புரிந்து கொள்வதற்கு ஏதுவாக அதன் டேனிஷ் மொழியாக்கம் எனக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் நான் விரும்புகிறேன். அதன் மூலம் என்னால் மற்றவர்களுக்கும் எடுத்துரைக்க முடியும். கலீஃபாவின் இந்த தூதுச் செய்தியை முழு டென்மார்க்கிலும் பரப்ப வேண்டும். நாம் அன்னாரின் இந்த தூதுச் செய்தியை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும். அன்னாரிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும். முஸ்லிம்கள் தீவிரவாதிகளாகவே இருப்பர் என நான் எண்ணம் கொண்டிருந்தேன். ஆனால், தற்போது நான் அந்த எண்ணத்தை கை விட்டு விட்டேன். அவ்வாறு எண்ணம் கொண்டதற்காக நான் வெட்கப்படுகிறேன். அவர்களில் பெரும்பாலார் நல்லவர்கள் ஆவர். ஆனால், மீடியா நமது மூளையை ஆட்கொண்டு விட்டது. எனது கணவர் இன்று காலை இங்கு வருவதற்கு என்னை தடை செய்து வந்தார். இங்கு ஏதாவது தாக்குதல் நடந்து விடும் அல்லது தற்கொலைத் தாக்குதல் நடந்து விடும் என அவருக்கு தோன்றியது. ஆனால், நான் அவரை இங்கு வரும்படி நிர்பந்தித்தேன். இப்போது, தான் வந்ததை எண்ணி அவரும் மகிழ்ச்சியாக உள்ளார். (கணவன், மனைவி இருவரும் வந்திருந்தனர்.) எனது கணவர் மிகவும் உணர்ச்சிவசப்பட்டு விட்டர். எவர் அழைக்கப்பட்டதற்கு பின்னரும் வரவில்லையோ அவர் பெரிய அறிவிலி ஆவார் என்றே நான் கூறுவேன் என்று அந்த பெண்மணி கூறுகிறார்.''

ஒரு டேனிஷ் அரசியல்வாதியான கிம் லோஃப்ஹோம் (Kim Lofholm) கூறினார்: ''கலீஃபாவைச் சந்திப்பது எனக்கு இது முதல் சந்தர்ப்பம் ஆகும். அன்னாரை நான் சந்தித்த அனுபவம் எனது வாழ்வில் மற்ற முஸ்லிமகளைச் சந்தித்ததிலிருந்து முற்றிலும் வேறுப்பட்ட அனுபவமாகும். உங்கள் இமாம் இஸ்லாத்தைப் பற்றி பிற முஸ்லிம்கள் கூறாதவற்றைக் கூறுகின்றார். இஸ்லாம் எல்லா மார்க்கத்திற்கும் சுதந்திரம் வழங்கியுள்ளது என்பதை உங்கள் கலீஃபா மிகவும் தெளிவுபடுத்திக் கூறுகின்றார்கள். கலீஃபாவின் வார்த்தைகளைக் கேட்பது உலகிற்கு மிக அவசியமாகும். இந்த தூதுச் செய்தி மிகப் பெரியதாகும். இந்தச் சொற்பொழிவு நிறைய ஞானம் வழங்கக் கூடியதாகும். உதாரணமாக, நான் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களைப் பற்றி அறிந்து கொண்டேன். அதாவது அன்னார் கிறிஸ்தவர்களை தமது பள்ளிவாயிலில் இறைவணக்கம் செய்ய அனுமதித்தார்கள் போன்ற விஷயங்களை அறிந்து கொண்டேன்.''

அடுத்து அமெரிக்க தூதரக பிரதிநிதி கூறினார்: ''கலீஃபா அவர்கள் இஸ்லாத்தின் உண்மையான முகத்தை வெளிப்படுத்தியுள்ளார்கள். Brazils மற்றும் பாரிஸ் தாக்குதலுக்குப் பிறகு மக்கள் இஸ்லாத்தின் மீது அச்சம் கொள்ளத் தொடங்கினர். ஆனால், இந்த தீவிரவாதத்திற்கு இஸ்லாத்துடன் எந்தத் தொடர்புமில்லை என்பதை கலீஃபா அவர்கள் தெளிவுபடுத்தி விட்டார்கள். இஸ்லாம் நுட்பமான ஞானம் மற்றும் அமைதி நிறைந்த மார்க்கமாகும். கலீஃபா அவர்கள் குறிப்பிட்ட அனைத்து விஷயங்களையும் தூதரிடம் எடுத்துரைப்பேன். கலீஃபா குறிப்பிட்ட எச்சரிக்கைகளையும், கருத்துச் சுதந்திரம் மற்றும் ஒருவர் மற்றவரைக் கண்ணியப்படுத்துதல் தொடர்பான விஷயங்களையும் எடுத்துரைப்பேன்.''

அடுத்து ஒரு டேனிஷ் விருந்தாளியான ஓர் ஆசிரியை கூறுகின்றார்: ''நான் இன்று இஸ்லாத்தைப் பற்றி அதிகமாக கற்றுக் கொண்டேன். நான் உங்கள் கலீஃபாவிடம் கேட்ட அனைத்தையும் எனது மாணவர்களிடம் சென்று கூறுவேன். ஏராளமான மக்கள் இஸ்லாத்தைப் பற்றி அச்சம் கொண்டுள்ளனர். ஆனால், நாம் இஸ்லாத்தைக் கண்டு அல்ல; மாறாக தீவிரவாதிகளைக் கண்டு தான் அஞ்ச வேண்டும் என்றும், இஸ்லாத்திற்கும் தீவிரவாதத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் உங்கள் கலீஃபா விளக்கி விட்டார்கள். இஸ்லாத்தைப் பற்றி நான் அறிந்திருக்கிறேன் என்றே நான் இதற்கு முன் எண்ணினேன். ஆனால் உண்மையில் எனக்கு ஒன்றும் தெரியாது. உதாரணமாக, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களுடன் மிக நல்ல முறையில் நடந்து கொண்டார்கள் என்று நான் அறிந்திருக்கவில்லை. இந்த விஷயம் என்னை மிகவும் உணர்ச்சிவசப்படச் செய்து விட்டது. சொற்பொழிவு நடுநிலையான அம்சத்தைக் கொண்டிருந்தது. சில முஸ்லிம்கள் மற்றும் சில முஸ்லிம் அல்லாதவர்கள் ஆகிய எவர்களின் செயல்கள் தீயதாக இருந்ததோ அவர்கள் அனைவரையும் கலீஃபா கண்டித்தார்கள்.''

ஒரு விருந்தினர் கூறினார்: ''நீங்கள் மற்ற சொற்பொழிவாளர்களின் கூற்றையும் கவனமாகக் கேட்பீர்கள் என்பதை நான் கண்டேன். மூன்றாம் உலகப் போர் தொடர்பான உங்கள் கருத்துக்கள் மிகவும் ஞானம் நிறைந்தவையாகும். நான் கொஞ்சம் கலக்கமும் அடைந்துள்ளேன். ஆனால், அதே நேரத்தில் உங்களின் சொற்பொழிவின் மூலம் கொஞ்சம் மன அமைதியும் அடைகிறேன்.

மால்மோவில் 140 விருந்தினர்கள் பள்ளிவாயில் திறப்பு விழாவில் கலந்து கொண்டனர். பாராளுமன்ற உறுப்பினர்கள் மால்மோ நகரின் மேயர் Police Cheif மற்றும் ஒரு Church Cheif பல்கலைக்கழகப் பேராசிரியர் மற்றும் பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்களும் கலந்து கொண்டனர்.

ஒரு யூதரான விருந்தினர் கூறுகின்றார்: ''இந்த நாள் என்னைப் பொறுத்தவரையில் மிக ஞானம் நிறைந்ததாக இருந்தது. நான் அதிலிருந்து இஸ்லாத்தைப் பற்றி மிகவும் அதிகமாகக் கற்றுக் கொண்டேன். இவ்வுலகில் இஸ்லாத்தைப் பற்றி மிக அதிகமாக எதிர்மறையான சிந்தனை காணப்படுகிறது. நாம் அனைவரும் முஸ்லிம்களின் தீவிரவாதத்தைக் கண்டு அஞ்சுகின்றோம். ஆனால், ஒரு முஸ்லிம் தலைவரிடமிருந்து வெறும் அன்பிற்கான தூதுச் செய்தியை மட்டுமே செவிமடுத்தது என்னை மிகவும் வியப்பில் ஆழ்த்தி விட்டது. கலீஃபா அவர்கள் இறைவனை வணங்க வேண்டுமென்றும் அத்துடன் மனித இனத்தின் மீது மிகவும் அன்பு கொள்ள வேண்டும் என்றும் கூறினார்கள். அதனைக் கேட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். முஸ்லிம்கள் நமது சகோதரர்கள் ஆவர் என்ற எண்ணத்தை கலீஃபா அவர்கள் எனக்குள் ஏற்படுத்தி விட்டார்கள். அதனால் பாலஸ்தீனியர்களுக்காக எனது உள்ளத்தில் கருணை அதிகரித்தது. அவர்களில் அனைவருமே தீயவர்கள் அல்ல. எப்படியிருப்பினும் அவர் தனது குற்றத்தை ஒப்புக் கொள்ளவில்லை என்றாலும் பாலஸ்தீனியர்கள் மீது கருணை காட்ட வேண்டும் என்று ஒப்புக் கொள்கிறார்.

மருத்துவமனையில் பணியாற்றும் ஒரு கிறிஸ்தவ போதகரான பெண்மணி கூறுகிறார்: ''இங்கு மால்மோ மற்றும் ஐரோப்பாவில் மக்கள் முஸ்லிம்களைக் கண்டும், பள்ளிவாயில்களைக் கண்டும் அஞ்சுகின்றனர். ஆனால், கலீஃபா அவர்கள் அமைதியைப் பற்றியும் மக்களின் பொறுப்புகள் பற்றியும், முக்கியமான விஷயங்களை எடுத்துரைத்தார்கள். தீமைகள் என்பது என்ன? என்பது பற்றியும் மிக அதிகமாக பேசியுள்ளார்கள். அன்னார் ஒரு பள்ளிவாயிலின் நோக்கங்களைப் பற்றி நமக்கு எடுத்துரைத்தார்கள். அன்னார் என்னை ஒப்புக் கொள்ளும்படி செய்து விட்டார்கள். பிறகும் அன்னார் பள்ளிவாயிலின் நோக்கங்களை ஏற்றுக் கொள்ளும்படி ஆதாரப்பூர்வமாக நிரூபித்து விட்டார்கள். பள்ளிவாயிலின் நோக்கம் பற்றிய தலைப்பு மிக அவசியமாக இருந்தது. மேலும் கலீஃபாவின் ஒவ்வொரு வாக்கியத்தின் வார்த்தைகளும் மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். ஒருவர் மற்றவரைக் கண்டு அஞ்சக் கூடாது. மாறாக, ஒருவர் மற்றவரைப் புரிந்து கொள்ள வேண்டும். ஒருவர் மற்றவரின் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என அவர்கள் கூறினார்கள். உங்களின் கலீஃபாவின் சொற்பொழிவு என்னை அசைத்து விட்டது. நான் மிகவும் உணர்ச்சிவசப்பட்டேன். இன்று நான் ஒரு முஸ்லிம் தலைவரை அமைதியைப் பற்றி மட்டுமே பேசுவதைக் கண்டேன். மேலும் இஸ்லாம் மனித இனத்திற்கு தொண்டாற்றும் மார்க்கம் என்பதை இன்று நான் புரிந்து கொண்டேன். அன்னாரின் சொற்பொழிவின் சிறந்த பகுதி இதுவாகும். மனித இனம் தன்னைப் படைத்த இறைவனை கண்டு கொள்ள வேண்டும். மேலும், இஸ்லாம் மனித இனத்திற்காக சேவை செய்வதற்கான மார்க்கமாகும் என்று கலீஃபா கூறினார்கள். இதுவே எனது கருத்தாகும்.''

மால்மோ நகரத்தின் மேயர் ஆன்டர்சன் அவர்கள் கூறுகின்றார்: ''கலீஃபா அவர்கள் அமைதியை நிலைநாட்டுவதற்கான நம்பிக்கையை தமது சொற்பொழிவில் கூறியுள்ளார்கள். மாறாக, இந்த நகரத்தில் கட்டப்பட்டுள்ள பள்ளிவாயிலின் உண்மையான நோக்கங்களையும் அன்னார் எடுத்துரைத்தார்கள். எனவே, நாம் இந்தப் பள்ளிவாயிலை இந்த நகரத்தின் அமைதியை நிலைநாட்டுவதற்கும் ஒற்றுமையை நிலைநாட்டுவதற்கும் காரணியாகக் கருதுகின்றோம்.''

ஒரு நிருபர் கூறினார்: ''இந்தப் பள்ளிவாயில் ஜமாஅத் மக்கள் தமது சொந்த செலவில் கட்டியுள்ளார்கள் என்பது ஆச்சரியமாக உள்ளது. இவ்விஷயம் எனக்கு மிகவும் வியப்பளிக்கக் கூடியதாகும். ஏனென்றால், இது சாதாரண தொகை கிடையாது. 30,000 மில்லியன் குரோனர் தொகை ஆகும். ஏராளமான பணிகளை நீங்கள் சுயமே செய்துள்ளீர்கள். இது பெரிய வெற்றியாகும். நான் தீவிரவாத சம்பவங்களைப் பார்க்கின்றேன். ஆனால், நீங்கள் அத்தகைய மக்களிடமிருந்து முற்றிலும் வேறுபட்ட மக்கள் ஆவீர்கள்.''

மேலும் அவர் தனது சம்பவம் ஒன்றைக் கூறினார்: ''ஒரு வாரம் முன்பு நான் சூப்பர் மார்க்கெட் சென்று கொண்டிருந்தேன். அங்கு ஒருவர் என்னிடம் நீங்கள் முஸ்லிமா என்று கேட்டார். அதற்கு நான் முஸ்லிமல்ல; கிறிஸ்தவர் என அவரிடம் கூறினேன். அதற்கு அவர் நீர் கிறிஸ்தவர் என்றால் நரகத்திற்குச் செல் என்று என்னிடம் கூறினார். ஆக, இது முஸ்லிம்களின் எண்ணமாகும். ஆனால், உங்களின் எண்ணங்கள் முற்றிலும் வேறுபட்டதாகும். இவ்விஷயம் அஹ்மதிகளாகிய உங்களிடம் தென்படுவதில்லை.''

மால்மோ பல்கலைக்கழகப் பேராசிரியரான ஒரு விருந்தினர் கூறினார்: ''கலீஃபாவின் சொற்பொழிவு மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது. அமைதி, அன்பு, சமத்துவத்திற்கான மிகவும் நேர்மறையான மற்றும் உலக அளவிலான தூதுச் செய்தியை அவர்கள் நமக்கு வழங்கியுள்ளார்கள்.''

அதைப் போன்று மால்மோவின் Lund பல்கலைக்கழக இஸ்லாமிய பாடத்தின் பேராசிரியர் கூறுகின்றார்: ''கலீஃபாவின் சொற்பொழிவு மிகவும் சுவாரஸ்யமானதாகவும், தன்னகத்தே தாக்கத்தைக் கொண்டதாகவும் இருந்தது.

அன்னாரின் சொற்பொழிவு நிறைவடைந்தவுடன் நான் பார்த்தேன். மக்கள் சொற்பொழிவைப் பற்றியே தமக்கிடையே பேசிக் கொண்டிருந்தனர். அனைவரும் தாக்கத்திற்கு ஆளாகி இருந்ததைக் காண முடிந்தது. பலர் சொற்பொழிவின் நகலைத் தரும்படி வேண்டிக் கொண்டிருந்தனர்.''

யூதர்களும் அந்நிகழ்ச்சிக்கு வந்திருந்தனர். கிறிஸ்தவர்களும் வந்திருந்தனர். Swedish அமைப்பான Church of Zentologhy Cheif for Information அவர்களும் வந்திருந்தார். அவர் கூறினார்: ''கலீஃபா தமது சொற்பொழிவில் ஒரு வாக்கியம் கூறினார். அது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அது இதுவாகும். ஒரு பெரும் நன்மைக்காக நாம் நமது தனிப்பட்ட நலனைப் புறந்தள்ளி விட வேண்டும்.''

சுவீடனில் வசிக்கும் மைக்கேல் என்ற நண்பர் கூறுகின்றார்: ''சொற்பொழிவு எல்லா வகையிலும் முழுமையானதாக இருந்தது. அதில் அமைதி மற்றும் ஒருவர் மற்றவருக்கு உதவி செய்வதற்கான தூதுச் செய்தி இடம் பெற்றிருந்தது. ஆப்பிரிக்காவைப் பற்றிய குறிப்பும் அதில் இடம் பெற்றிருந்தது. ஸ்கூல் போன்ற வசதிகள் எல்லாம் ஆப்பிரிக்காவில் ஏற்படுத்தித் தரப்படுவதாக அதில் கூறப்பட்டது. நான் இறைவன் மீது நம்பிக்கை வைத்துள்ளேன். ஆனால், இங்கு மற்ற மக்களில் பெரும்பாலார் நம்பிக்கை வைப்பதில்லை. இறைவன் மீது உறுதியான நம்பிக்கை கொண்ட மனிதரை நான் சந்தித்தேன் என்பதில் நான் பெருமிதம் கொள்கிறேன். உங்கள் சொற்பொழிவைக் கேட்ட பிறகு நான் இஸ்லாத்தின் மீது அச்சம் கொள்ளவில்லை. மாறாக, தீவிரவாதிகளைக் கண்டே அச்சம் கொள்கிறேன். இஸ்லாமும், தீவிரவாதமும் முற்றிலும் வேறுபட்ட ஒன்றாகும் என்பது எனக்கு தெளிவாகி விட்டது.''

அடுத்து யுகோஸ்லோவியாவைச் சார்ந்த முஸ்லிமான ஒரு விருந்தினர் ஹுஸைன் அப்துல்லாஹ் சாஹிப் கூறுகிறார்: ''கலீஃபாவின் சொற்கள் என் மனதைத் தொட்டு விட்டது. நான் அன்னாரின் அனைத்து கருத்துக்களையும் ஆமோதிக்கின்றேன். அன்னார் மற்ற முஸ்லிம்களால் எடுத்து வைக்க முடியாத கோணத்தில் இஸ்லாத்தின் சிறப்புகளை எடுத்துரைத்தார்கள். அமைதி, அன்பு, சமத்துவத்தைப் பற்றி அழுத்தம் கொடுத்தார்கள். நாம் அனைவரும் ஏழைகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்பது இஸ்லாத்தின் போதனையாகும் என்றும் கூறினார்கள். நான் தற்போது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது பெருமிதம் கொள்கிறேன். இஸ்லாத்தைப் பற்றி மக்களுக்கு தவறான எண்ணங்கள் உள்ளன. அதனை சீர் செய்வது ஓர் எளிதான வேலையல்ல. ஆனால், கலீஃபா இப்பணியில் மற்ற அனைவரையும் விட முன்னனியில் உள்ளார்கள்.''

ஒரு சுவீடிஸ் விருந்தினர் தனது எண்ணங்களை இவ்வாறு வெளிப்படுத்து –கின்றார்: ''இந்த மாலைப்பொழுது என் மீது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இஸ்லாம் என்றால் என்ன? என்பதை நான் கற்றுக் கொண்டுள்ளேன். கலீஃபா சில நிமிடங்களில் பல்வேறு தலைப்புகளில் சொற்பொழிவு நிகழ்த்தினார். இதற்கு முன் நான் கேட்டிராத இஸ்லாத்தை எடுத்துரைத்தார்கள். சில முஸ்லிம்கள் தீயவர்கள். ஆனால், கலீஃபா திருக்குர்ஆனின் ஆதாரங்களை எடுத்து வைத்து அதுபோன்ற மக்கள் திருக்குர்ஆனின் போதனைக்கு எதிராக செயல்படுகின்றனர் என்பதை எடுத்துரைத்தார்கள்.''

ஓர் அரசியல்வாதி கூறினார்: ''ஓர் உண்மையான முஸ்லிமிடமிருந்து அமைதியை நீங்கள் உணர வேண்டும். இவ்விஷயம் கலீஃபாவின் சொற்பொழிவில் இடம் பெற்றிருந்தது. நான் அந்த நிகழ்ச்சியில் இருந்த போது உண்மையிலேயே உங்களிடம் பாதுகாப்பை உணர்ந்தேன்.''

ஒரு கிறிஸ்தவ பாதிரி கூறினார்: ''நான் உங்களுடைய கலீஃபாவின் சொற்பொழிவின் ஒவ்வொரு சொல்லையும் ஆமோதிக்கிறேன். நாம் இறைவனை நினைவில் கொள்ள வேண்டும். இதுவே மார்க்கங்களின் அடிப்படையாகும் என்ற செய்தி குறிப்பாக எனக்குப் பிடித்திருந்தது. மேலும், தொடக்கத்தில் அன்னார் திருக்குர்ஆனை ஓதியபோது அது எனக்கு மிகவும் ஆத்மீகமானதாக இருந்தது. என்னை நிலைகுலையவும் செய்தது.''

மற்றொரு விருந்தினர் கூறினார்: ''இன்று நான் வேறோர் உலகில் இருப்பதாக உணர்ந்தேன். ஒருவர் மற்றவருக்கு உதவி செய்யுங்கள். குறிப்பாக ஏழைகளுக்கு உதவுங்கள் என்பதே மையக் கருத்தாகவும் இருந்தது. மார்க்கம், உள்ளத்தோடு தொடர்புடைய விஷயமாகும் என்பதை கலீஃபா திருக்குர்ஆன் மூலமாக நிரூபித்தார்கள். மேலும், எனக்கு ஆறுதல் வழங்கினார்கள். இங்கு கூடியிருந்த மற்றவர்களும் அதிலிருந்து பயன் பெற்றிருப்பர் என நான் நம்புகிறேன்.''

ஒரு விருந்தினர் கூறினார்: ''இன்றைய சொற்பொழிவில் கலீஃபா பல்வேறு தலைப்புகளில் பேசினார்கள். இஸ்லாம் தீவிரவாத மார்க்கம் என மக்கள் கூறுகின்றனர். ஆனால், உங்கள் கலீஃபாவின் தூதுச் செய்தி முற்றிலும் அதிலிருந்து வேறுபட்டதாகும்.''

அடுத்து ஒரு சுவீடிஸ் விருந்தினர் கூறுகின்றார்: ''நான் இஸ்லாத்தைப் பற்றி நிறைய படித்துள்ளேன். இஸ்லாம் தீவிரவாத மார்க்கம் என மீடியா எப்போதும் கூறி வந்தது. ஆனால், இன்று அதற்கு நேர்மாற்றமாக செவிமடுக்க நேரிட்டது. கலீஃபா அவர்கள் நமக்கு ஆறுதல் மட்டும் வழங்கவில்லை. மாறாக, நமது அச்சத்தையும் நீக்கி விட்டார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அமைதி நிறைந்தவர் என்பதையும் நிரூபித்தார்கள்.''

அடுத்து ஒரு பெண் விருந்தினர் கூறுகின்றார்: ''இன்று இங்கு நான் வருவதற்கு முன் இஸ்லாத்தைப் பற்றி அச்சம் கொண்டிருந்தேன். ஆனால், இங்கு எனக்கு தென்பட்டவை – நான் பார்த்தவை முற்றிலும் வேறுபட்டவையாகும். கருணை உள்ளம், அனுதாபம், அன்பு இவையே கலீஃபாவின் தூதுச் செய்தியாக இருந்தது. நீங்கள் ஒவ்வொரு நபரிடமும் அவரது மார்க்கத்தை பொருட்படுத்தாமல் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்ற கலீஃபாவின் இந்தக் கூற்று உள்ளத்தைத் தொட்டது. இஸ்லாம் அண்டை அயலாருடன் நல்ல விதமாக நடக்கும்படி போதிக்கின்றது என்பது எனக்கு மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்.''

இதுபோன்ற ஏராளமான விருந்தினர்களில் புத்த மதத்தினர்களும் உள்ளனர். கிறிஸ்தவர்களும் உள்ளனர். யூதர்களும் உள்ளனர். அனைவரும் இஸ்லாத்தின் போதனை, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்மாதிரி நிச்சயமாக தீவிரவாதத்திற்கு எதிராகவே உள்ளது என்பதை அனைவரும் வெளிப்படையாக ஒப்புக் கொண்டனர்.

ஒரு பாராளுமன்ற உறுப்பினர் கூறினார்: ''கலீஃபா அவர்கள் ஒவ்வோரிடத்திலும் எல்லா மட்டத்திலும் இஸ்லாத்தின் பிரதிநிதித்துவத்தை வெளிப்படுத்த வேண்டும். அன்னாரின் கூற்றை மக்கள் கேட்க வேண்டும். ஒருவருக்கு இஸ்லாத்தைப் பற்றிய அச்சம் இருந்திருந்தாலும் அது இப்போது அகன்றிருக்கும்.''

மற்றொரு விருந்தினர் கூறினார்: ''இந்த சொற்பொழிவு ஆஸ்திரிய நாட்டு மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். ஏனெனில் அந்நாட்டில் மக்கள் இஸ்லாத்தின் மீதான வெறுப்பிலும், அச்சத்திலும் பைத்தியமாகி விட்டார்கள். இஸ்லாம் அமைதியை விரும்பக் கூடிய மார்க்கமாகும் என்பதை அவர்கள் கற்றுக் கொள்ளும் பொருட்டு அவர்கள் இந்த சொற்பொழிவைக் கேட்பது மிகவும் அவசியமாகும். கலீஃபா மிக அழகிய முறையில் பள்ளிவாயிலின் நோக்கங்களைப் புரிய வைத்தார்கள். பள்ளிவாயில் என்பதன் பொருள் அமைதி ஆகும். அதே போன்று ஸலாத் என்பதன் பொருளும் அமைதி மற்றும் பாதுகாப்பு என்று கூறினார்கள். அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு அரசியலோடு எந்த சம்பந்தமுமில்லை. உங்கள் கலீஃபா கூறியது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அஹ்மதிய்யா ஜமாஅத் அமைதியை நிலை நாட்டுவதற்காக மட்டுமே கவலை கொள்கிறது. அஹ்மதிகள் மனித இனத்தின் மீதான கஷ்டங்களை நீக்க விரும்புகின்றனர் என்று உங்கள் கலீஃபா கூறியது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அடுத்து கலீஃபா அவர்கள் கூறிய இந்த விஷயமும் பிடித்திருந்தது. மஸ்ஜிதே ஸரார் என்ற பள்ளிவாயில் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் காலத்தில் இடிக்கப்பட்டது. இதிலிருந்து மஸ்ஜித் – அமைதியை வழங்கக்கூடிய இடம் என்பது தெரிய வருகின்றது.''

சுவீடன் தலைநகரிலும் ஒரு வரவேற்பு நிகழ்ச்சி நடந்தது. அங்கும் 6 பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். அதில் காவல்துறை அதிகாரிகளும் அடங்குவர். மேலும், அங்கு மக்கள் மிகவும் நல்ல தாக்கங்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

ஒரு விருந்தினர் கூறினார்: ''இன்று கற்றுக் கொள்வதற்கு எனக்கு நிறைய இருந்தது. மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது. கலீஃபா இங்கு வருகை தந்ததற்கு நான் மிகவும் நன்றி செலுத்துகிறேன். நாம் எந்தவொரு பிரச்சனையையும் கண்ட பிறகு கண்களை மூடிக் கொள்ளக் கூடாது என்ற உணர்வை கலீஃபாவின் தூதுச் செய்தி நம்மிடம் ஏற்படுத்தியுள்ளது. இது மிக வலிமையான தூதுச் செய்தியாகும்.''

அடுத்து ஒரு விருந்தினர் கூறினார்: ''இன்று உலகில் மனிதனை, மனிதரிடமிருந்து விலக்கி வைக்க விரும்பும் சக்திகள் செயலாற்றி வருகின்றன. அனைவரையும் ஓரிடத்தில் ஒன்று கூட்டுவதில் நீங்கள் எல்லா வகையிலும் வெற்றி பெற்றுள்ளீர்கள். ஏனென்றால், நாம் சந்திக்கும் போதுதான் எங்கள் கண்கள் திறக்கின்றன. மேலும் கற்றுக் கொள்வதற்கு வாய்ப்புகள் கிடைக்கின்றன.''

ஈராக்கிலிருந்து வரக்கூடிய ஒரு கிறிஸ்தவ முஹாஜிர் ஸலாம் சாஹிப் அவர்கள் (இடம் பெயர்ந்தவர்) கூறுகிறார்கள்: ''நான் ஈராக்கில் ஒருபோதும் இதுபோன்ற விஷயங்களைக் கேட்டதில்லை. உங்கள் கலீஃபா கூறுகின்ற விஷயங்களை அங்கு எவரும் எடுத்துக் கூறுவதில்லை. ஈராக்கிய மக்கள் உங்கள் கலீஃபாவின் கூற்றுகளைக் கேட்டிருந்தால் எங்களுக்கு தற்போது ஹிஜ்ரத் செய்ய நேரிட்டிருக்காது. சுவீடிஸ் மக்களுக்கு முன்னர் பிச்சைக்காரனைப்போன்று வந்து நிற்கும் நிலையும் ஏற்பட்டிருக்காது. நான் ஏதோ அவர்களின் உரிமைகளைப் பறிக்க வந்துள்ளதாக அவர்களுக்கு தோன்றுகிறது. இந்த உணர்வு மிகத் தீயதாகும். ஈராக்கில் உங்கள் கலீஃபாவைப் போன்று ஒரு நபர் கூட கிடையாது. உலகில் என்ன நடக்கின்றது? என்பதை கலீஃபா அவர்கள் தெளிவாகக் கூறுகின்றார். மற்றெல்லா முஸ்லிம் பிரிவுகளை விட உங்கள் ஜமாஅத் சிறந்ததாகும்.''

அடுத்து ஒரு பெண் விருந்தினர் கூறுகின்றார்: ''கலீஃபா வழங்கிய தூதுச் செய்திதான் அசல் தூதுச் செய்தி ஆகும். அனைத்து மார்க்கங்களின் அடிப்படையும் இதுதான். கலீஃபா மனிதநேயத்தின் பக்கம் அழைக்கின்றார்கள். கலீஃபாவின் கூற்றைக் கேட்ட பிறகு உலகப் பிரச்சனைகளுக்கு மார்க்கம் காரணமல்ல என்ற நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. முஸ்லிம்களுடன் நமக்கு கருத்து வேறுபாடு உள்ளது என்றால் அது மார்கம் சார்ந்தது அல்ல. மாறாக, அது கலாச்சாரம் சார்ந்ததாகும். டென்மார்க் எலக்ட்ரானிக் மீடியா மற்றும் அச்சு ஊடகங்களின் நல்ல கவரேஜ் கிடைத்துள்ளது. அதில் கிரிஸ்ஜன், பிலாதத் என்ற

தேசிய செய்தித்தாளில், ஹோட்டலில் நடைபெற்ற நிகழ்ச்சியைப் பற்றி செய்தி வந்துள்ளது. அதனைப் படிப்பவர்களின் எண்ணிக்கை 50,000 மட்டுமே ஆகும். அதேபோன்று 24 என்ற ரேடியோ சேனலின் நிருபர் நேர்காணல் எடுக்க மிஷன் ஹவுஸிற்கு வருகை தந்தார். என்னிடத்தில் ஏறக்குறைய 45 நிமிடம் நேர்காணல் எடுத்து டேனிஸ் மொழியாக்கத்துடன் அதனை அப்படியே வெளியிட்டார். இந்த ரேடியோவை கேட்கக்கூடிய நேயர்களின் எண்ணிக்கை 25 ஆயிரத்திலிருந்து 40 ஆயிரம் வரை ஆகும். GR என்ற டிவி தனது செய்தியில் நமது நிகழ்ச்சியை ஒளிப்பரப்பியது. அதன் பார்வையாளர்கள் 2 மில்லியன் ஆகும். அதே போன்று மற்ற மீடியாக்கள் மூலமாக 3 மில்லியன் மக்கள் வரை இஸ்லாத்தின் தூதுச் செய்தி சென்றடைந்துள்ளது. ஸ்வீடனில் பல்வேறு செய்தித்தாள்களிலும் ரேடியோ மற்றும் டி.வி சேனல்களில் 6 நேர்காணல்களும் நடந்தன. நேஷனல் டி.வி –யில் அவர்கள் செய்தியையும் ஒளிபரப்பினர். இவ்வாறு சுமார் 8 மில்லியன் மக்கள் வரை சுவீடனிலும் தூதுச் செய்தி சென்று சேர்ந்துள்ளது. ஜமாஅத்தின் தூதுச் செய்தி சென்று சேரும் விஷயங்கள் மற்றும் நான் எடுத்துரைத்த பல்வேறு நபர்களின் தாக்கங்கள் இருக்கின்றன. அல்லாஹ்வின் உரிமைகளை வழங்குவதிலேயே இஸ்லாத்தின் உண்மையான போதனை அடங்கியுள்ளது என்று பொதுவாக இஸ்லாத்தின் போதனையைக் கேட்டு அவர்களுக்கு தெரிய வந்துள்ளது. மேலும், அத்துடன் படைப்பினங்களுக்குரிய உரிமைகளையும் நிறைவேற்ற வேண்டும். மேலும், அஹ்மதிய்யா ஜமாஅத் கிலாஃபத்தோடு இணைந்திருக்கின்றது. எனவே இந்த உரிமைகளை அது நிறைவேற்றுகிறது என்று அவர்களுக்கு தெரிந்து விட்டது.

எனவே, ஒவ்வோர் அஹ்மதியும் இந்த அடிப்படை விஷயத்தைப் புரிய வேண்டும். அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் தொடர்புடையவர்களாக இருப்பதன் மூலமாக மட்டுமே இந்த உரிமைகள் சரி வர நிறைவேற்றப்பட முடியும். உண்மையான கிலாஃபத் தம்மவர்களின் (தம்மை ஏற்றுக் கொண்டவர்களின்) அச்சத்தை மட்டும் அமைதியில் மாற்றுவதில்லை. அந்நியர்களின் அச்சத்தையும் அமைதியின் நிலையாக மாற்றுகின்றது. நான் எடுத்துரைத்த பல்வேறு தரப்பட்ட நபர்களின் தாக்கங்களில் பெரும்பாலும் இதுவே கூறப்பட்டுள்ளது. அதாவது அவர்களின் அச்சத்தின் நிலை நமது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதன் மூலம் அமைதியின் நிலையாக மாறி விட்டது. இது அல்லாஹ்வின் வாக்குறுதியாகும். இதன் காரணமாக அல்லாஹ்வின் உதவிகளும் நம்முடன் இருக்கின்றது. அது இஸ்லாத்தின் அழகிய போதனைகள் மூலம் பிறர் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறது. எனவே, சிலர் திருக்குர்ஆனை படிக்கப் போவதாகவும் கூறினார்கள். அதற்கான ஒன்றிரண்டு உதாரணங்களையும் நான் கூறியிருந்தேன்.

எனவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களை விட்டு விலகிச் சென்று இக்காலத்தில் ஒருவர் கிலாஃபத்தை நிலை நாட்ட விரும்பினால் அவர் தோல்வி அடைவார். அவரால் அமைதியை ஏற்படுத்த முடியாது. ஏனென்றால், நாம் பார்க்கின்றோம். ஆரம்ப காலத்தில் கிலாஃபத்தே ராஷிதாவின் காலத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் காலத்தில் என்ன நடந்தது? சிரியா மற்றும் ஈராக்கில் எப்படிப்பட்ட அமைதியை அன்னார் நிலைநாட்டினார்கள் என்றால் ரோமானியப் பேரரசு அந்த நாட்டிற்கு மீண்டும் திரும்பி வர வேண்டும் என கிறிஸ்தவர்கள் கூறினர். முஸ்லிம்கள் திரும்பியதும் அவர்கள் மகிழ்ச்சியைக் கொண்டாடினர். ஆனால், இப்போது என்ன நடக்கிறது? சிரியா மற்றும் ஈராக்கில் கிலாஃபத் என்ற பெயரில் அமைப்பு உருவாக்கப்பட்டது. தற்போது அது வலிமையை இழந்து விட்டது. ஆரம்பத்தில் இருந்த வலிமையைக் கூட தற்போது இழந்து நிற்கிறது. அதற்கு எந்த அழுத்தமும் இல்லை. எந்தப் பணி கிலாஃபத்தின் பெயரால் ஆரம்பமானதோ அது 2, 3 ஆண்டுகளிலேயே இன்னும் கூறப்போனால் அதை விட குறைவான காலங்களில் முடிந்து போனது. வெறும் அமைப்பின் பெயரே எஞ்சி நிற்கின்றது. அது தன்னை சார்ந்தவர்களுக்கும் அமைதியை வழங்கவில்லை. அந்நியர்களுக்கும் அமைதியை வழங்கவில்லை. அங்கு செல்லக் கூடியவர்களில் பலர் இஸ்லாம் மற்றும் கிலாஃபத்தின் பெயரால் ஒரு உத்வேகத்துடன் சென்றனர். ஐரோப்பிவிலிருந்தும் பலர் சென்றனர். ஆனால் இஸ்லாத்திற்கு எதிரான செயல்களைக் கண்டு அவர்கள் நிராசை அடைந்தனர். திரும்பி வர ஆசைப்பட்டனர். ஆனால் அவர்களால் திரும்பிர முடியாமல் போனது. மீடியாக்களில் அந்த செய்தி வருகின்றது. அங்கு அச்சத்தின் நிலையில் வாழ்கின்றனர். எல்லா வழிகளும் அவர்களுக்கு அடைபட்டு போனது. தீவிரவாதத்தின் நிலை என்னவென்றால், கடந்த நாட்களில் செய்தி வந்தது. ஒரு பெண்மணியின் பால்குடிக் குழந்தை பசியின் காரணமாக கதறிக் கொண்டிருந்தது. அந்த பெண்ணின் வீடோ மிகவும் தூரமாக இருந்தது. எனவே, அந்தப் பெண் தனிமையில் ஓரிடத்திற்கு சென்று மரத்திற்கு அடியில் அமர்ந்து தன்னை முற்றிலும் மூடிக் கொண்டு குழந்தைக்கு பாலூட்ட ஆரம்பித்தாள். அப்போது பெயர்தாங்கி இஸ்லாத்தின் குத்தகைக்காரர்களான இஸ்லாத்திற்கு உதவி செய்யக் கூடியவர்கள் வந்தனர். பெயர் தாங்கி கிலாஃபத்தின் சிப்பாய்கள் நீ சாலையில் குழந்தைக்குப் பாலூட்டுகிறாய் என்று கூறி அந்த பெண்ணிடமிருந்து அந்தக் குழந்தையை பறித்துக் கொண்டனர். உண்மையில் மறைவான இடத்தில் அமர்ந்தே அந்த பெண் குழந்தைக்குப் பாலூட்டினாள். பின்னர் துப்பாக்கியால் சுட்டு அந்த பெண்ணைக் கொன்று விட்டனர்.

இதுதான் அங்கு நடக்கும் அநீதியாகும். அவர்கள் தம்மவர்களின் அனுமதியையும் பறித்துக் கொண்டனர். அந்நியர்களுக்கும் இவர்கள் எவ்வாறு அமைதியை வழங்குவர்? நான் உதாரணம் கூறியிருந்தேன். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் காலத்தில் கிறிஸ்தவர்கள் கூட நமக்கு முஸ்லிம்கள் அமைதியை வழங்கி வருகின்றனர் என மகிழ்ச்சியாக இருந்தனர். ஆனால், இன்று அதற்கு நேர் மாற்றமாக அனைத்தும் நடக்கின்றது. ஆனால், அஹ்மதிய்யா கிலாஃபத் மட்டுமே தன்னை ஏற்றுக் கொண்டவர்கள் மற்றும் அந்நியர்களின் அச்சத்தை அமைதியின் நிலையாக மாற்றுகின்றது. பல்வேறு தரப்பட்ட நபர்களின் தாக்கங்களிலிருந்தும் அது தெளிவாகிறது. அல்லாஹ்வின் உதவி ஒத்தாசைக்கான சாட்சிகள் அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் உள்ளது. அது ஒருபோதும் குறைவதில்லை என்பதும் நிரூபணமாகிறது. நான் கூறியதுபோன்று கடந்த 108 ஆண்டு கால வரலாறு இதற்கு சாட்சியாக உள்ளன.

இது ஒரு மனிதனின் வேலையாக இருந்திருந்தால் எப்போதோ முடிந்து போயிருக்கும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறினார்கள். எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் ஜமாஅத்தின் தோற்றம் மற்றும் கிலாஃபத் பற்றிய வாக்குறுதி இறைவனின் வாக்குறுதியாகும். மேலும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் காலத்தில் அதனை முடித்து விட மக்கள் முயன்றனர். ஆனால் முடியவில்லை. அவர்கள் இன்னும் முயற்சி செய்வர். அல்லாஹ்வின் அருளால் அவர்களால் அவ்வாறு ஒருபோதும் செய்ய முடியாது – இன்ஷா அல்லாஹ். இப்போது இந்த கிலாஃபத் மற்றும் இந்த அமைப்பு அல்லாஹ்வின் அருளால் நிரந்தரமாக நிலைபெறக் கூடியதாகும். நாம் நமது வசதி வாய்ப்புகளை எண்ணிப் பார்த்தால் இத்தனை பெரிய எண்ணிக்கையில் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைக்க முடியும் என நம்மால் கற்பனை கூட செய்ய முடியாது. ஆனால், அல்லாஹ்வின் தக்தீர் இந்தச் தூதுச் செய்தியை பூமியில் எல்லை வரை கொண்டு சேர்க்க வேண்டும் என தீர்மானித்து விட்டால் பின்னர் இந்த முன்னேற்றங்களைத் தடுத்து நிறுத்தக் கூடியவர் யார் இருக்கின்றார்? எந்த உலகச் சக்தியாலும் இதனை தடுத்து நிறுத்த முடியாது. அல்லாஹ்விடம் நாம் இவ்வாறு துஆ செய்ய வேண்டும். அதாவது, அல்லாஹ் ஒவ்வோர் அஹ்மதியையும் எப்போதும் நன்றியுணர்வுடன் அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் தொடர்புடையவராக ஆக்குவானாக! மேலும், நாம் அல்லாஹ்வின் வாக்குறுதி மேலும் புதுப்பொழிவுடன் அதிவிரைவாக முழுமை பெறுவதைக் காண்பவர்களாக திகழ்வோமாக!

நான் தொழுகைக்குப் பிறகு மூன்று ஜனாஸா தொழுகைகளை தொழ வைப்பேன். அதில் ஒன்று ஹாஸிர் ஜனாஸா ஆகும். இரண்டு காயிப் ஜனாஸா ஆகும்.

ஹாஸிர் ஜனாஸா மதிப்பிற்குரிய சவுத்ரி ஃபஸ்ல் அஹ்மது சாஹிப் அவர்களுடையதாகும். இவர் நன்கானாவை சார்ந்த மர்ஹூம் மாஸ்டர் குலாம் முஹம்மது சாஹிப் அவர்களின் மகனாவார்கள். மே 23 ஆம் தேதி அன்று தமது 80 –வது வயதில் வஃபாத்தாகி விட்டார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّا اِلَیۡہِ رَاجِعُوۡنَ அன்னார் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் சஹாபி ஹஸ்ரத் உமருத்தீன் சாஹிப் பங்க்வி அவர்களின் மகள்வழிப் பேரன் ஆவார். நீண்ட காலமாக மண்டி பஹாவுத்தீன் எனும் ஊரில் வசித்து வந்தார். பின்னர் ஜங்க் எனும் ஊருக்கு இடம் பெயர்ந்தார்கள். சில ஆண்டுகளாக இலண்டனில் மஸ்ஜித் ஃபஸ்ல் பகுதியில் வசித்து வந்தார். முழு வாழ்நாளிலும் பல்வேறு பொறுப்புகளில் ஜமாஅத்திற்கு தொண்டாற்றும் நற்பாக்கியம் அவருக்கு கிடைத்தது. மண்டி பஹாவுத்தீன் எனும் ஊரில் செகரட்டரி மால் மற்றும் செகரட்டரி தஃலீமுல் குர்ஆன் மற்றும் இமாமுஸ்ஸலாத் போன்ற பொறுப்புகளில் தொண்டாற்றியுள்ளார். தாம் இருந்த இடங்களில் நூற்றுக்கணக்கான குழந்தைகளுக்கு திருக்குர்ஆன் ஓதக் கற்றுக் கொடுக்கும் நற்பாக்கியம் அவருக்கு கிடைத்தது. 1987 –ல் ரமலானின் கலிமா தய்யிபா ஓதிய வழக்கில் இறைவழியில் கைதாகும் கண்ணியமும் அவருக்கு கிடைத்தது. மிகவும் நல்ல மனிதர். திருக்குர்ஆன் மீது அன்பு கொண்டவர். மர்ஹூம் வஸிய்யத் செய்தவராகவும் இருந்தார். அவர் தனது நினைவாக 5 மகள்களையும் இரண்டு மகன்களையும் விட்டுச் சென்றுள்ளார். அல்லாஹ் மர்ஹூமின் அந்தஸ்தை உயர்த்துவானாக!

இரண்டாவது ஜனாஸா மதிப்பிற்குரிய தாவூது அஹ்மது சாஹிப் ஷஹீது அவர்களுடையதாகும். இவர்கள் கராச்சியைச் சார்ந்த மதிப்பிற்குரிய ஹாஜி குலாம் முஹிபுத்தீன் சாஹிப் அவர்களின் மகனாவார்கள். அன்னார் கராச்சியில் வசித்து வந்தார்கள். மே 24 ஆம் தேதி அன்று அன்னாரது 60 வது வயதில் அஹ்மதிய்யத்தின் எதிரிகள் ஏறக்குறைய இரவு 9.00 மணிக்கு அன்னாரது வீட்டிற்கு அருகில் துப்பாக்கியால் அவரை சுட்டு ஷஹீதாக்கி விட்டனர். اِنَّا لِلّٰہِ وَاِنَّا اِلَیۡہِ رَاجِعُوۡنَ அறிக்கையின் அடிப்படையில் மதிப்பிற்குரிய தாவூது அஹ்மது சாஹிப் தமது வீட்டிற்கு வெளியே தமது அஹ்மதி அல்லாத நண்பரை எதிர்பார்த்து அமர்ந்திருந்தார்கள். அன்னாரது நண்பர் அருகிலேயே வந்து கொண்டிருந்தார். அதற்குள் மோட்டார் சைக்கிளில் அடையாளம் தெரியாத இரு நபர்கள் வந்தனர். மோட்டார் சைக்கிளில் பின்புறம் அமர்ந்திருந்தவன் மோட்டார் சைக்கிளை விட்டு இறங்கி அன்னாரை சுட்டு விட்டான். அஹ்மதி அல்லாத அவரது நண்பர் அவரை நோக்கிச் சென்றார். அவரின் கால்களில் எதிரிகள் துப்பாக்கியால் சுட்டு விட்டு சம்பவ இடத்தை விட்டு தப்பித்து ஓடி விட்டனர். மதிப்பிற்குரிய தாவூது சாஹிபிற்கு 3 குண்டுகள் பட்டன. அது நெஞ்சையும், வயிற்றையும் துளைத்திருந்தது. சுப்பாக்கிச் சூட்டின் சப்தத்தைக் கேட்டு அக்கம்பக்கத்தினர் ஒன்று கூடினர். தாவூது சாஹிபை அருகிலிருந்த மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு முதலுதவி வழங்கினர். பின்னர் நேஷனல் மருத்துவமனைக்கு மாற்றம் செய்தனர்.

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 99448-03650
SUB EDITOR
RAFEEQ AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

Title Code: PUNTAM00001
The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Vol. 1 | Thursday 30 JUNE 2016 | Issue No. 17

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
Tel. : +91 1872-224757
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

அங்கு மருத்துவர் தாவூது சாஹிபிற்கு அறுவை சிகிச்சை செய்தார். ஆனால் வயிற்றில் சுடப்பட்ட குண்டு கல்லீரல் மற்றும் குடலை துளைத்திருந்தது. நெஞ்சில் சுடப்பட்ட குண்டால் அதிகமான இரத்த இழப்பு ஏற்பட்டிருந்தது. எனவே அவரால் உயிர் பிழைக்க முடியவில்லை. மேலும் அறுவை சிகிச்சை நடந்து கொண்டிருக்கும் போதே உயிர்த்தியாகத்தின் பானத்தை அவர் அருந்தினார். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அஹ்மதி அல்லாத அவரது நண்பர் காயமடைந்திருந்தார். தற்போது இறை அருளால் குணமடைந்து விட்டார். ஷஹீது மா்ஹூமின் குடும்பத்தில் அன்னாருடைய பாட்டனாரின் காலத்தில் அஹ்மதிய்யத் மலர்ந்தது. அன்னாரின் பாட்டனார் ஹஸ்ரத் மவ்லவி அலிஃப் தீன் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் அருளுக்குரிய கைகளில் பைஅத் செய்து அஹ்மதிய்யத்தில் இணைந்தார். பின்னர் அந்தக் குடும்பம் ரப்வாவில் குடிபெயர்ந்தது. 1956 ஆம் ஆண்டு ரப்வாவில் தான் ஷஹீது மா்ஹூம் பிறந்தார். இவர்களுடைய தந்தை இராணுவத்தில் பணியாற்றி வந்தார்கள். பின்னர் கராச்சி திருப்பினார். அங்கு கல்வி கற்றார். அன்னாரது தந்தை கடற்படையில் பணியாற்றினார். ஒரு சம்பவத்தில் ஷஹீது மா்ஹூம் ஒரு விபத்தில் தனது ஒரு கையையும் இழந்திருந்தார். ஆனால் ஒரு கை இல்லாததன் குறை தமது பணிகளில் தடையாக இருப்பதை அனுமதிக்கவில்லை. எண்ணற்ற சிறப்புகளுக்கு உரிமையாளர் ஆவார். மிகவும் மென்மையான இயல்பு படைத்தவர். தமது பகுதியில் அனைவரின் அன்பையும் பெற்றவர். நம்பிக்கைக்கு பாத்திரமானவர். நல்லுள்ளம் மற்றும் நல்ல முன்னுதாரணம் படைத்தவர். சம்பவத்திற்குப் பிறகு விசாரனை அதிகாரிகள் விசாரித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது அனைவருமே கூறினர். இந்த நபர் எவருடனும் சண்டையிட்டதே இல்லை. சண்டையிடுவது என்பது இயலாத காரியம். மாறாக, பிறருக்கு அவர் உதவி செய்து வந்தார். பிறருக்கு பயன்படக்கூடிய நல்ல மனிதராவார் என்றும் கூறினர். ஜமாஅத் தொண்டுகளிலும் முன்னிலை வகித்தார். அன்னாரின் வீடு 18 ஆண்டுகளாக தொழுகை மையமாகப் பயன்படுத்தப்பட்டது. மேலும் இதற்கிடையில் அன்ஸாருல்லாஹ் மற்றும் இதர ஜமாஅத் பொறுப்புகளில் தொண்டாற்றும் வாய்ப்பும் அவருக்கு கிடைத்தது. அன்னாரின் ஒரு மகன் ஜாமிஆ அஹ்மதிய்யா ரப்வாவில் 4 ஆண்டு படித்து வருகிறார். அவருக்கு இரண்டு மகன்கள். மற்றொருவர் பணியின் காரணமாக வெளிநாட்டில் உள்ளார். அல்லாஹ் ஷஹீது மா்ஹூமின் அந்தஸ்தை உயர்த்துவானாக! அன்னாரது பிள்ளைகளிடத்தும் அன்னாரின் நன்மைகளைத் தொடரச் செய்யும் நற்பாக்கியத்தை வழங்குவானாக!

மூன்றாவது ஜனாஸா மதிப்பிற்குரிய முஹம்மது ஆலம் சாஹிப் உடையதாகும். அன்னார் மே 25 தேதியன்று காலை ரப்வாவில் தமது 74 –வது வயதில் வஃபாத்தாகி விட்டார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். அன்னார் பேரா ஜமாஅத்தின் முன்னாள் அமீர் மதிப்பிற்குரிய மவ்லவி அஷ்ரப் சாஹிப் அவர்களின் மகனாக அக்டோபர் 1942 –ல் காதியானில் பிறந்தார்கள். அன்னாரின் குடும்பத்தில் அஹ்மதிய்யத் அன்னாரது பாட்டனார் மதிப்பிற்குரிய முன்ஷி முஹம்மது சாஹிப் மூலமாக அறிமுகமானது. அன்னார் 1909 –ல் பைஅத் செய்திருந்தார். அன்னார் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் லால்பூரின் மகள்வழிப் பேரனும், மவ்லவி முஹம்மது அஹமது சாஹிப் ஜலீல் அவர்களது சகோதரியின் மகனுமாவார்கள். அன்னாரின் தந்தை மவ்லவி அஷ்ரப் சாஹிபும் வக்ஃபே ஜதீதின் கீழ் முஅல்லிமாக இருந்தார்கள். அவர் 10 –ஆம் வகுப்பு வரை படித்திருந்தார். 1979 –ல் ஷாஹித் தேர்ச்சி பெற்றார். பின்னர் இஸ்லாஹ்– வ–இர்ஷாத் அலுவலகத்திலும் பணியாற்றினார். வகாலத்தே தஃப்ஸீரிலும் பணியாற்றினார். மேலும் நஸாரத் தஃலீமுல் குர்ஆனிலும் பணியாற்றினார். பல்வேறு பகுதிகளில் முரப்பியாகவும் பணியாற்றியுள்ளார். 1988 வரை நஸாரத் இஷாஅத் வ தஸ்னீஃபில் பணியாற்றினார். 2006 வரை நஸாரத்தே திவானில் பணியாற்றினார். பின்னர் 2006 முதல் 2008 வரை தஹ்ரீகே ஜதீத் பத்திரிகையின் எடிட்டராக இருந்தார். 2008 முதல் மரணமடையும் வரை ஜாமிஆவில் ஒரு முக்கியப் பொறுப்பில் இருந்தார். அல்லாஹ்வின் அருளால் அன்னார் வெற்றிகரமான பெரிய முரப்பியாக இருந்தார். சில புத்தகங்களும் எழுதியுள்ளார். அன்ஸாருல்லாஹ்விலும் தொண்டாற்றியுள்ளார். மேலும் மிக அதிகமாக துஆ செய்யக்கூடியவராக அன்னார் திகழ்ந்தார். அன்னாரின் அந்தஸ்தை அல்லாஹ் உயர்த்துவானாக! அன்னார் தமக்குப் பிறகு தமது ஒரு மனைவியையும், 3 மகள்கள் மற்றும் ஒரு மகனை விட்டுச் சென்றுள்ளார். அந்த மகன் இங்கு தான் உள்ளார். தந்தையின் ஜனாஸாவில் அவர் கலந்து கொள்ள முடியவில்லை. அல்லாஹ் அன்னாரின் பிள்ளைகளுக்கும் அவரது மனைவிக்கும் பொறுமையையும் தைரியத்தையும் வழங்குவானாக! மேலும் தமது தந்தையின் நன்மைகளைத் தொடரச் செய்யும் நற்பாக்கியத்தை வழங்குவானாக! ஆமீன்.

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

கொள்ள முடியும்? மாறாக, அவன் மனித முயற்சிகளுக்கு தன் தரப்பிலிருந்து ஒரு கனியை வழங்குகின்றான். அதில் இறையொளியும் இறைவனின் ஆதிக்கமும் இருக்கும். உதாரணமாக, நான் ஏற்கனவே கூறியதுபோன்றே மனிதன் இறைவன் மீது நம்பிக்கை கொள்வது தொடர்பாக எந்த இறைவனின் இருப்பிற்கு இந்த உலகிலுள்ள ஒவ்வோர் அணுவும் சாட்சி பகர்கின்றதோ அந்த மறைவான இறைவன் மீது ஈமான் கொள்வதைவிட அதிகமாக அவனால் வேறு என்ன செய்ய முடியும்? ஆனால், தனது பாதங்களால் தனது முயற்சிகளால் தனது கையின் வலிமையால் மட்டும் இறை தன்மையின் ஒளிகளைப் பற்றி அறிந்து கொள்வதற்கும் ஈமானின் நிலையிலிருந்து (இறைவனை அடையாளங் கண்டு கொள்கின்ற) இர்ஃபானின் நிலையை அடைவதற்கும் இறைவனை காண்கின்ற அந்த நிலைமையை தனக்குள் உருவாக்குவதற்கும் மனிதனிடம் ஆற்றல் இல்லை. மனிதன் தன்னால் இயன்றவரை தூய்மையைப் பேணியவாறு மனதிலுள்ள சலனங்களை அகற்றி தொழுகையை நிறைவேற்றுவது தொழுகை ஒரு வீழ்ந்து விட்ட நிலையில் இருக்கக் கூடாது என்பதற்காக முயற்சி செய்வது அதன் எல்லா பகுதிகளையும் அதாவது கண்ணியத்திற்குரிய இறைவனை புகழ்வது, தஸ்பா செய்வது இஸ்திக்ஃபார் செய்வது, துஆ செய்வது, தருது ஓதுவது ஆகியவற்றை உள்ளத்து உணர்வுடன் செய்வது ஆகியவற்றை தவிர மனிதனின் உழைப்பும் முயற்சியும் தொழுகையை நிறைவேற்றுவதில் இதை விட அதிகமாக வேறு என்ன செய்ய முடியும்? ஆனால், இறைவன் மீது வழக்கத்திற்கு அப்பாற்பட்ட ஒரு தனிப்பட்ட நேசம் வைத்திருப்பது அவனுக்காக ஒரு தனிப்பட்ட பணிவையும் உருக்கத்தையும் மேற்கொள்வது அவனுக்காக தன்னை மாய்த்துக் கொள்வதானல் நிரம்பிக் காணப்படுகின்ற இன்பம் மற்றும் ஆர்வம் ஒரு வகையில் இறைவனை காண்பது போன்று எல்லா மாசுகளை விட்டும் வெறுமையாகி மனதை ஒருநிலைப்படுத்தும் நிலையை அவனது தொழுகையில் உருவாக்குவது ஆகியவை மனிதனின் கையில் இல்லை. இதன் காரணமாகவே இறைவன் இறையச்சம் உடையவர்கள் தொழுகையை நிற்கச் செய்கின்றனர் என்று கூறுகின்றான். விழுவதற்குத் தயாராக இருக்கின்ற அந்த பொருள்தான் நிற்க வைக்கப்படுகின்றது. இறையச்சமுடையவர்கள் தங்களால் இயன்றவரை தொழுகையை நிலைநாட்டுவதற்கு முயற்சி செய்கின்றனர். இதற்காக செயற்கைத் தன்மையையும் முயற்சிகளையும் பயன்படுத்துகின்றனர் என்பதே يُقِيمُونَ الصَّلٰوةَ என்பதன் பொருளாகும். ஆனால், இறைவனின் அருள் இல்லாமல் மனிதனின் முயற்சிகள் வீணானதாகும். எனவே தான் அந்த கருணைமிக்க இறைவன் هُدًى لِّلْمُتَّقِيْنَ என்று கூறியுள்ளான். அதாவது இறையச்சமுடையவர்கள் அவர்களால் இயன்ற வரை தக்வாவின் வழியில் நின்றவாறு தொழுகையை நிற்கச் செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். பிறகு அவர்கள் எனது வார்த்தைகளின் மீது நம்பிக்கை கொண்டிருந்தால் அவர்கள் செய்கின்ற உழைப்பு மற்றும் முயற்சியில் மட்டும் நான் அவர்களை விட்டு விட மாட்டேன். மாறாக, நானே அவர்களின் கையைப் பிடித்து வழிகாட்டுவேன். அப்போது அவர்களது தொழுகை வேறொரு தரத்தைப் பெற்றுப் விடும். அவர்களின் எண்ணத்திலும் யூகத்திலும் கூட இல்லாத இன்னொரு நிலைமை அவர்களிடம் உருவாகி விடும் என்று இறைவன் இவ்வசனத்தில் கூறியுள்ளான். அவர்கள் இறைவனின் வார்த்தைகளான திருக்குர்ஆன் மீது நம்பிக்கை கொண்டு அவர்களால் இயன்றவரை அதன் கட்டளைகளுக்கேற்ப செயல்பட்டதனால் மட்டுமே இந்த அருள் அவர்கள் மீது இருக்கும். சுருக்கமாக, தொழுகை தொடர்பாக எந்த அதிகப்படியான நேர்வழிக்கான வாக்குறுதி தரப்பட்டுள்ளதோ அது இதுவேயாகும். அதாவது, எந்த அளவு இயல்பான உணர்வும், இறைவன் மீது அன்பும், உருக்கமும், முழுமையாக மனதை ஒருநிலைப்படுத்தும் நிலைமையும் மனிதனுக்கு கிடைத்து விடும் என்றால் மனிதனின் கண்கள் தனது உண்மையான நேசத்திற்குரியவனைப் பார்ப்பதற்காக திறக்கின்றது. இறைவனின் அழகைக் காண்பதற்கு அசாதாரணமான ஒரு நிலைமை கிடைக்கின்றது. அது முழுக்க முழுக்க ஆன்மீக இன்பங்களால் நிறைந்திருக்கின்றது. அது உலகத்தின் அழுக்குகள், சொல்லாலும் செயலாலும் கண்களாலும் காதுகளாலும் நிகழ்கின்ற பல வகையான பாவங்கள் ஆகியவற்றை உள்ளம் வெறுக்கும் படி செய்கின்றது. இதைப்பற்றியே அல்லாஹ் إِنَّ الْحَسَنٰتِ يُذْهِبْنَ السَّيِّاٰتِ என்று கூறுகின்றான்.

(ஹகீஃகத்துல் வஹீ. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 136-139)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad